பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 12 சனிக்கிழமை 28.08.2021 கதிர் 296

## இனி அது ரகசியம் அல்ல!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மெய்நிகர் முறைமையில் நடப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிகின்றது. அதற்கான முயற்சியை தமிழரசின் பதில் பொதுச் செயலாளர்

பக்கம்02 »

## கொரோனாச் சாவு உச்சம்; மேலும் 214 பேர் உயிரிழப்பு

### மொத்தக் காவு 8,371 ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 214 பேர் நேற்றுமுன்தினம் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவே நாளொன்றில் இதுவரை பதிவான அதிக கொரோனாச் சாவு எண்ணிக்கையாகும்.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா காவுகளின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 371 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 214 பேரில் 120 ☞2

## 4,561 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று

இலங்கையில் மேலும் 4 ஆயிரத்து 561 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 16 ஆயிரத்து 931 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 122 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். ☞2

# செப்.6 இற்குப் பின்பும் நாட்டை முடக்கி மக்களின் வயிற்றில் அடிக்கமாட்டேன்!

### கொரோனா ஒழிப்பு செயலணிக் கூட்டத்தில் கோட்டாபய உறுதி



கொழும்பு, ஓகஸ்ட் 28

நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டே செப்டெம்பர் 6ஆம் திகதி வரை தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நீடித்துள்ளேன். அதற்குப் பின்னரும் ஊரடங்குச் சட்டத்தை நீடித்து அன்றாடம் வருமானம் பெறும் தொழில்களில் ஈடுபடும் மக்களின் வயிற்றில் அடிக்கமாட்டேன்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்தார். ☞2

## உருக்குலைந்த நிலையில் சடலம்

கிளிநொச்சி, பூநகரி கடற்பகுதியில் வலைகளால் சுற்றப்பட்டு உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் கடற்பகுதியில் சடலம் ஒன்று மிதந்த நிலையில் காணப்பட்டதைக் கண்ணுற்ற வீதியால் சென்றோர் அது ☞10

### ஜனாதிபதி தலைமையிலான நேற்றைய கூட்டத்தில் பங்கேற்ற

## அமைச்சர் பந்துலவுக்குக் கொரோனா!

கொழும்பு, ஓகஸ்ட் 28

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ருவிட்டர் பதிவொன்றை நேற்றிரவு வெளியிட்டு இந்த விடயத்தை அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

தற்போது அவர் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 20ஆம் திகதி முதல் தன்னுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்கள் அனைவரும் சுயதனிமைப்படுத்தலில் இருக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



## தமிழக முதல்வருக்கு சுமந்திரன் எம்.பி. நன்றி தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

ஈழத் தமிழர்களின் நலனுக்காக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் 317 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கும் நலத்திட்ட நடவடிக்கைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. நன்றி தெரிவித்தார். ☞2

## வவுனியாவில் நேற்று மாத்திரம் 222 பேருக்கு கொரோனா உறுதி

### மேலும் இருவர் உயிரிழப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் நேற்று 222 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இருவர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரி சோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் ☞10

## வவுனியாவில் மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா, கற்குளம் படிவம் 3 பகுதியில் திடீரென மயங்கி விழுந்த நபர் உயிரிழந்துள்ளார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கற்குளம் படிவம் 3 பகுதியில் வசிக்கும் 50 வயது மதிக்கதக்க ஆண் ஒருவர் திடீரென மயக்கமடைந்து கீழே விழுந்துள்ளார். இதையடுத்து அயலவர்களின் உதவியுடன் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் குறித்த நபர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

எனினும், வவுனியா ☞2

## சாவகச்சேரியில் உயிரிழந்த பெண்ணுக்கு தொற்று உறுதி

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசித்து வந்த பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 74 வயதுடைய பெண் உயிரிழந்தார். அவரது பி.சி.ஆர். மாதிரி நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ☞10

## யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்ற மருத்துவர் உட்பட மூவர் நேற்று சாவு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மருத்துவர் உட்பட மேலும் மூவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் யாழ். கிளையில் மருத்துவச் சான்றிதழ் வழங்கும் மருத்துவர்களில் ஒருவரான நல்லூரைச் சேர்ந்த 72 வயதுடையவரே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

மேலும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றுடன் சிகிச்சை பெற்று வந்த மானிப்பாயைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவரும், உரும்பிராயைச் சேர்ந்த 56 வயதுடைய ஆண் ஒருவரும் நேற்று உயிரிழந்துள்ளனர்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மருத்துவர் சத்தியலிங்கம் முன்னெடுத்து வருகின்றார்.

இரா.சம்பந்தன், மாவை சோனாதிராசா, செல்வராசா, சி.வீ.கே.சிவஞானம், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், மருத்துவர் சத்தியலிங்கம், குலநாயகம், கலையரசன், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா ஆகியோர் இதன் உறுப்பினர்கள். சார்ள்ஸ் நிர்மலநாதனையும், சாந்தி ஸ்ரீகாந்தராஜாவையும் அரசியல் குழுவில் சேர்த்துக் கொள்வது எனப் பின்னர் முடிவு செய்யப்பட்டிருந்தது.

இவர்களில் சட்டத்தரணி தவராஜா, கொரோனா சிகிச்சைக்கு உட்பட்டிருக்கின்றமையால் நாளைய கூட்டத்தில் கலந்து கொள்வாரோ தெரியவில்லை.

தீர்வு முயற்சிகள் தொடர்பாக பேராசிரியர், ஜி.எல்.பீரிஸுடன் அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் சந்திப்பு, ஜனாதிபதி தரப்புடன் பின் கதவுப் பேச்சுகள், மாகாண சபைத் தேர்தலுக்கான சட்டங்களை உடன் ஒழுங்குபடுத்துமாறு அரசைக் கோரியமை ஆகியவை தொடர்பில் சுமந்திரனின் தகவல்களை அறிவதில் நாளைய கூட்டத்தில் முக்கியத்துவம் கொடுப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விடயம் மலிந்தால் சந்திக்கு – சந்தைக்கு – வரும்தானே... அப்போது பார்த்துக் கொள்வோம்.

★ ★ ★

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக வேறு மாற்று வழியின்றி சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைவது என்ற முடிவுக்குப் பெரும்பாலும் ராஜபக்ஷ அரசு வந்து விட்டது என்றே கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப கடன் பெற்று, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியுமாயினும், அவ்வப்போது சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது அரசியல் தலைமைகளுக்கு மிக நெருக்கடியாக இருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

பொருள்களின் விலைகளை, வரிகளை அதிகரியுங்கள் என்றெல்லாம் நாணய நிதியம் கட்டாயப்படுத்தும். அரசியல் தலைமைகள் அரசியல் ரீதியாக அத்தகைய முடிவுகளை எடுக்க விரும்பாவிட்டாலும், அந்த வழிகாட்டல்களைப் பின்பற்றியேயாக வேண்டியிருக்கும். வேறு வழியில்லை.

1970களின் பிற்பகுதியில் அதிகாரத்துக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா – நிதியமைச்சர் றொனி டி மெல் கூட்டு இதே போல முதல் தடவையாக சர்வதேச நாணய நிதியத்தின் காலில் விழத் தயாரான போது, இது ஆபத்தான விளையாட்டு, இது மோசமான நெருக்கடிகளைத் தரும் என்று ஜே.ஆரின் உறவினரும், ஆலோசகருமான ஒருவர் எச்சரித்தார். யார் தெரியுமா? ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையார் எஸ்மண்ட் விக்கிரமசிங்கதான் அது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றால், விரும்பத்தகாத பொருளாதார முடிவுகளை, அரசியல் நிலைப்பாடுகளை விருப்பை மீறி எடுக்க வேண்டி வரும். ஏதாவது அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் தஞ்சம் புகுந்தால், மீண்டும் ஆட்சிக்கு வராது, ஏனெனில் நாணய நிதியத்தின் வழிகாட்டல்படி நடந்து அது மக்கள் செல்வாக்கை இழந்து விடும் என்றெல்லாம் எச்சரித்தார் எஸ்மண்ட் விக்கிரமசிங்க. ஆனால் அதை மீறி ஜே.ஆர். – றொனி டி மெல் இணை சர்வதேச நாணய நிதியத்தின் காலில் விழுந்தது. ஜே.ஆர்.தமது இரண்டாவது ஆட்சிக்குப் பொதுத் தேர்தலை நடத்தாமல், சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி ஆட்சியை நீடித்துக் கொண்டமையால் தப்பிக் கொண்டார். ஆனால் அதற்குப் பின்னால் ஐ.தே.கவினால் மீண்டெழுந்து வர முடியவில்லை.

தந்தை எஸ்மண்ட் விக்கிரமசிங்க தமது மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்குக் கூறிய ஆலோசனையை ரணில் விக்கிரமசிங்கவும் பின்னாள்களில் கவனத்தில் எடுக்கவேயில்லை.

அதனால்தான் அதற்குப் பிறகு பிரதமரான ரணிலின் அரசு ஒவ்வொரு தடவையும் மக்களிடம் கெட்ட பெயர் வாங்கிக் கொண்டு கெட்டழிந்தது.

2015 இல் நல்லாட்சி அரசு வந்த போதும் முதலில் நிதியமைச்சரான ரவி கருணாநாயக்கா, சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் கேட்டுப் போக மாட்டேன் என்று மறுத்து விட்டார். ரணில் வற்புறுத்தியும் அவர் இணங்கவில்லை. வேறு நாடுகள்,தரப்புகளிடம் கடன் வாங்கலாம்; சர்வதேச நாணய நிதியத்திடம் வேண்டவே வேண்டாம் என்று அவர் பிடிவாதம் பிடித்தார். ஒன்றரை வருடத்தில் அவரை நிதி அமைச்சர் பதவியிலிருந்து தூக்கி விட்டு மங்களவை அப்பதவிக்கு நியமித்த ரணில், அவர் மூலம் மீண்டும் சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைந்தார். அந்த நல்லாட்சி அரசும் கடைசியில் – வழமைபோல – கெட்டழிந்தது.

இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுங்கள் என்று ரணில் விக்கிரமசிங்க வற்புறுத்தி ஆலோசனை கூறுகின்றார். அதையே பின்பற்ற முடிவெடுத்திருக்கின்றார் புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது இதில் மிகுந்த எச்சரிக்கையாக இருந்தார். அவர் சர்வதேச நாணய நிதியம் பக்கம் அதிகம் சாயவில்லை. ஆனால் பஸில் ராஜபக்ஷ வேறு வழியின்றி சர்வதேச நாணய நிதியத்தின் கதவைத் தட்டுகின்றார். இது வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் எதோ ஒன்றைக் கரடி என்று தெரியாமல் கட்டிப் பிடித்த கதையாகத்தான் போகும் போல...!பிடித்தவர் விட்டாலும் கரடி விடாதமை போல, சர்வதேச நாணய நிதியத்தைப் பற்றிப் பிடித்து, சிக்கத் தயாராகின்றார் புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

அவருக்கும் நாட்டுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைக் கூறுவதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை...!

– மின்னல் –

## செப்.6 இற்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில், அன்றாடம் வருமானம் பெறும் தொழில்களில் ஈடுபடுவோர் மற்றும் வருமானம் குறைந்த மக்கள் தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்த வேண்டும் எனவும் அதிகாரிகளிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கொரோனா ஒழிப்பு தொடர்பான விசேட கூட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை, செப்டெம்பர் 6ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொரோனாத் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதோடு, இதுவரையில் தடுப்பூசி ஏற்றப்படாத 30 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் மற்றும் பிரதேசங்கள் காணப்படுமாயின், அவர்களுக்குத் தேவையான தடுப்பூசிகளைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள, சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

பிறிதொரு காரணத்தால் தடுப்பூசியின் முதலாம் டோஸைப் பெற்றுக்கொள்ள முடியாத நபர்கள் காணப்படுவார்களாயின், இரண்டாவது டோஸ் தடுப்பூசி ஏற்றப்படும் நிலையங்களில் வைத்தே அவ்வாறானவர்களுக்கும் முதலாவது டோஸ் தடுப்பூசியை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் இதன்போது குறிப்பிடப்பட்டது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்வது தொடர்பில் பொதுமக்களை ஊக்கப்படுத்தும் வேலைத்திட்டங்களை, பிரதேச ரீதியில் அரசியல்வாதிகள் முன்னெடுக்க வேண்டுமெம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதன்போது கூறினார்.

இந்த வைரஸ் தொற்றைக் கட்டுப் படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இதுவரை பரிந்துரைகளை முன்வைத்த வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத்துறை முக்கியஸ்தர்கள் ஆகியோர், எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் தொற்றா நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படுமாயின், உடனடியாக அவர்களை வைத்தியசாலைகளில் அனுமதிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்படும் நபர்கள், உரிய மருத்துவ சிகிச்சைகளின் பின்னர் வெகு விரைவில் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்புகின்றனர் என்றும் ஜனாதிபதியிடம் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

கொரோனா நோய்க்கு ஆளாகாத நிலையில் அல்லது வீட்டில் எந்தவொரு நபரும் தனிமைப்படுத்தப்படாத நிலையில் நபரொருவர் உயிரிழப்பாராயின், அவருக்கான இறுதிக் கிரியைகளை 24 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்வது தொடர்பில் ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தைத் தொடர்ந்துச் செயற்படுத்துவது தொடர்பிலும், இந்தக் கூட்டத்தின் போது விசேட அவதானம் செலுத்தப்பட்டது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வீடுகளில் சிகிச்சைப் பெற்றுவரும் கொரோனா நோயாளிகளை, தொடர்ந்து மருத்துவக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று பாதுகாப்புப் பணிக் குழாம் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில், பொதுமக்களின் நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது. அன்றாடம் வருமானம் பெறும் தொழில்களில் ஈடுபடுவோர் மற்றும் வருமானம் குறைந்த மக்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்துவதன் அவசியம் தொடர்பில் ஜனாதிபதி இதன்போது கூறினார்.

தேசிய பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்துகொண்டே, வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தை நிதி அமைச்சர் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை, நிவாரண விலைக்குப் பெற்றுக்கொடுக்க, சதொச ஊடாக வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெளிவுபடுத்தினார்.

இதேவேளை, நாடு முழுவதிலுமுள்ள மக்களுக்கு, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கக்கூடிய தேசிய ஔடதங்களைப் பெற்றுக்கொடுக்க சுதேச மருத்துவ அமைச்சு முன்னெடுத்துள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி விவரித்தார்.

## கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்களும், 94 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஆண்கள் மூவரும், பெண்கள் இருவரும் என ஐவர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 34 ஆண்கள், 24 பெண்கள் என 58 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 151 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 83 ஆண்களும், 68 பெண்களும் அடங்குகின்றனர்.

## தமிழக முதல்வருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:–

தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் வசிக்கும் எமது ஈழத்தமிழர்களின் நலன் கருதி பல்வேறு நலத்திட்டங்களை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக கூட்டமைப்பின் சார்பில் அவருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் ஈழத்தமிழ் அகதிகளுக்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னெடுக்க ஆலோசித்துள்ள அகதி முகாம்களில் வாழும் ஈழத்தமிழ் உறவுகளுக்கு நிரந்தரமான வதிவிட வசதிகளை ஏற்படுத்துதல், ஈழத் தமிழர்களின் எதிர்கால நலன் கருதிய வளர்ச்சித் திட்டங்களுடன் அவர்களின் உயர்கல்விக்கான உதவித் திட்டம் மற்றும் தாயகத்துக்கு மீளக்குடியமர விரும்புகின்றவர்கள் தொடர்பான தீர்மானங்களை முன்னெடுப்பதற்கான குழுவையும் அமைத்து ஆக்கபூர்வமாக நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

முதன்முறையாக தமிழ்நாடு சட்ட சபையில் ஒரு முதல்வர் இப்படியான திட்டங்களை அறிவித்துள்ளதோடு அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் வழங்கியுள்ளமையானது ஓர் ஆக்கபூர்வமான செயலாகும்.

இதற்காக எமது மக்கள் சார்பாகவும் கூட்டமைப்பு சார்பிலும் உளம் கனிந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றோம் – என்றார்.

## 4, 561 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 53 ஆயிரத்து 191 ஆக உயர்வடைந்துள்ளது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதற்கு முன்னரே அவர் மரணமடைந்துள்ளார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து குறித்த நபருக்குக் கொரோனாத் தொற்று உள்ளதா என பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பரிசோதனை முடிவுகளையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



# தடுப்பூசியினை செலுத்திக் கொண்டால் மரணமடைவது தடுக்கப்படுகின்றது

கொரோனாத் தடுப்பூசி நூற்றுக்கு நூறு வீதம் செயல்திறன் மிக்கதாக இல்லாவிட்டாலும் கூட, அதனூடாக நோயாளர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்படுவதும், மரணமடைவதும் பெரும்பாலும் தடுக்கப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பஹ்ரைனில் நடத்தப்பட்ட ஓர் ஆராய்ச்சியை மேற்கோள் காட்டி, ஸ்ரீஜெ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நீலிகா மாலவிகே, தமது டுவிட்டர் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

சினோபோர்ம் தடுப்பூசியை செலுத்தாத 50 வயதுக்கு மேற்பட்டவர்களின் இறப்பு, தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களை விட 8.1 மடங்கு அதிகம் என அவர் கூறியுள்ளார்

அதேநேரம், பைஸர், அஸ்ட்ராஜெனெகா மற்றும் ஸ்புட்னிக் - வி தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட 50 வயதுக்கு மேற்பட்டவர்களிடையே இதுவரையில் மரணங்கள் பதிவாகவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

50 வயதுக்குக் குறைந்த, தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்களின் மரணமானது, சினோபோர்ம் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களைவிட 3.8 மடங்கு அதிகமாகும் என்றும் இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நான்கு தடுப்பூசிகளின் முடிவுகளும் டெல்டா மாறுபாட்டுக்கு முன்னும் பின்னும் தடுப்பூசி போடாதவர்களுடன் ஒப்பிடும் போது இந்த இறப்புகளைக் குறைப்பதில் பயனுள்ளதாக இருப்பது தெரியவந்துள்ளதாகவும் அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாடு செல்வோருக்கு ஒன்லைன் மூலம் ஸ்மார்ட் கொரோனாத் தடுப்பூசிச் சான்றிதழ்

வெளிநாடு செல்வோருக்கு வசதியாக ஒன்லைன் முறை மூலம் ஸ்மார்ட் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்ட சான்றிதழ் வழங்கும் முறையொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, covid-19.health.gov.lk/certificate எனும் இணையத்தள இணைப்பின் ஊடாக சென்று, தங்களது விவரங்களை வழங்கி, குறித்த சான்றிதழை பெற முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றுடன் இணைந்து இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனமான ஐ.சி.ரி.ஏ. இனால் குறித்த சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த தளத்தில் விண்ணப்பதாரி தனது பெயர், முகவரி, கடவுச்சீட்டு இலக்கம், வெளிநாடு செல்லும் திகதி உள்ளிட்ட தகவல்களை வழங்க வேண்டும்.

அத்துடன், கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, தடுப்பூசி செலுத்திய அட்டை, வெளிநாடு செல்வது தொடர்பான ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட படங்களையும் இணைக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொருள்களின் விலைகள் உயர்வால் மக்கள் அவதி

## பந்துலவுக்கு செல்வம் கடிதம்



பொருள்களின் விலை உயர்வால் மக்கள் அவதிப்படுகின்றனர் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர், வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ள அவர் -

அத்தியாவசியப் பொருள்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் அல்லது கட்டுப்பாட்டு விலையில் எந்தப் பொருள்களையும் பெற முடியாத சூழ்நிலை எனது தேர்தல் மாவட்டங்களான மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவில் உள்ளது.

ஏழைகளின் உணவுப் பொருள்களாகக் கருதப்படும் அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் கட்டுப்பாட்டு விலைக்கு மேல் விற்கப்படுகின்றன.

இந்த விவகாரத்தை ஆராய எந்த அரச அதிகாரிகளும் முன் வருபவர்களாகத் தெரியவில்லை. பொருள்களின் விலை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டிருந்தும்கூட நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மாறுபட்டு கூடிய விலையில் பொருள்கள் யாவும் விற்கப்படுகின்றன.

இதற்கு காரணம் அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்கு என்றே கூறவேண்டும். மக்கள் எவ்வளவு கடினமாக உழைத்தாலும் தங்கள் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலையே இங்கு காணப்படுகிறது.

எனவே இவ் விடயத்தை கவனத்தில் இருத்தி இந்த மக்களின் அவதி நிலையை போக்க உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.- என தெரிவித்துள்ளார்.

# கொரோனா சட்டமூலத்துக்கு சபாநாயகரினால் சான்றளிப்பு!

2019 கொரோனா வைரஸ் தொற்று (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலத்துக்கு சபாநாயகர், மஹிந்த யாப்பா அபேவர்தன சான்றளித்துள்ளார்.

குறித்த சட்டமூலம் கடந்த 17 ஆம் திகதி அன்று வாக்கெடுப்பு இல்லாமல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் 2019 கொரோனா வைரஸ் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் 17 இம்மாதம் 23 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நெருக்கடிக்கான தீர்வாக சர்வதேச நாணய நிதியத்தை நாடுங்கள்!

## ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை

நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளார்.

அதன்படி உடனடியாக சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று உதவி பெறுவதே இதற்கான தீர்வு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நிலைமை தொடர்பாகவும் முடக்க கட்டுப்பாட்டை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்குமாறும் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிவிப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 72கோடி அமெரிக்க டொலர்களை இலங்கை பெற்றுள்ளது என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.



# தமிழ்த் தேசியக் கட்சிகள் எதிர்காலத்தில் இணைந்து பயணிக்க தீர்மானித்துள்ளன

தமிழ்த் தேசியக் கட்சிகள் எதிர்காலத்தில் இணைந்து பயணிப்பதற்கு தீர்மானித்துள்ளன என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிரதம செயலாளர்களாக சிங்கள அதிகாரிகள் இருக்க இயலுமென்றால் மத்திய அரசாங்கத்திலே பணிப்பாளர் நாயகங்களாக தமிழ் பேசும் அதிகாரிகள் ஏன் இருக்க முடியாது?

எனவே இந்த விடயம் இந்த நாட்டை மீண்டும் ஓர் அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்வதற்கான அறிகுறியாகவும் மீண்டும் ஒரு போரை ஏற்படுத்துவதற்குமான எத்தனிப்பாகவுமே தென்படுகின்றது.

இன்று பதவி உயர்வு பெற்ற தமிழ் பேசும் அதிகாரிகள் தங்கள் வேலை செய்த இடங்களில் விடுவிப்பைப் பெற்று மத்திய அரசின் கீழ் தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்கச் சென்றவர்கள் அங்கு ஏற்படுத்தப்பட்ட தடை காரணமாக பொது நிர்வாக அமைச்சிலே வெறுமனே கையெழுத்து வைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

எனவே அந்த உயர் அதிகாரிகளை தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்று அவர்களது கடமைகளைச் செய்ய விட வேண்டும். அல்லது வடக்கு கிழக்கிலே இருக்கும் சிங்கள அதிகாரிகளை அங்கே எடுத்துவிட்டு இவர்களை வடக்கு கிழக்கிலே அவர்களது கடமைகளைச் செய்வதற்கு வழிவகுக்க வேண்டும் - என அவர் தெரிவித்தார்.

# மகாநாயக்கர்களை சந்தித்தமை எந்தவிதத் தவறுகளும் இல்லை

## பொலிஸாரைப் பாதுகாத்தது பொதுப் பாதுகாப்பு அமைச்சு

ஈஸ்டர் தாக்குதல் குறித்த அறிக்கையால் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து பொலிஸ் உயரதிகாரிகள் அண்மையில் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்தமையில் எவ்வித தவறும் இல்லை என பொதுப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மதத் தலைவர்களைச் சந்தித்து தங்களின் குறைகளை எவராலும் தெரிவிக்க முடியும். எனவே, இந்த விடயத்தை ஒரு பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது என பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஜகத் அல்விஸ் கூறியுள்ளார்.

மேல் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், நந்தன முனசிங்க உள்ளிட்ட சில உயர்மட்ட பொலிஸார் அண்மையில் அஸ்கிரிய மகாநாயக்க தேரரை சந்தித்து ஈஸ்டர் தாக்குதல் பற்றி பரபரப்பு விடயங்களைப் பேசியிருந்தனர்.

குறிப்பாக பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் மூலம் சில பொலிஸ் அதிகாரிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக இதன்போது சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்நிலையில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய தேசபந்து தென்னகோன், கிடைத்த புலனாய்வுப் பிரிவின் தகவல் தொடர்பாக அப்போதைய அரசாங்கமோ அல்லது பாதுகாப்பு அமைச்சோ பொலிஸாருக்குத் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கவில்லை எனக் கூறியிருந்தார்.

இவ்வாறு அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை அண்மையில் சந்தித்த பொலிஸ் உயரதிகாரிகள் ஈஸ்டர் தாக்குதல் பற்றி கருத்து வெளியிட்டமை தொடர்பான விசாரணைகளை நடத்தும்படி கத்தோலிக்க திருச்சபை வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டால், அவர்கள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டும். பின்னர் அவர்கள் மீது பிழை இல்லை எனில் சட்டத்தின் முன் அதை நிரூபிக்க முடியும். இத்தகைய சூழ்நிலையில், பொலிஸ் அதிகாரிகள் மதத் தலைவர்களிடம் சென்று அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க முயற்சிக்கின்றமை ஏற்புடையதல்ல என்றும் கத்தோலிக்க திருச்சபை கூறியுள்ளது.

மேலும் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக முறையாக விசாரணைகளை நடத்துவதற்குப் பதிலாக, முரண்பட்ட கருத்துக்களை பொலிஸ் அதிகாரிகள் வெளியிடுகின்றமை இன மோதலை உருவாக்கக் காரணமாக அமைந்துவிடும் என்றும் அருட்தந்தை சிரில் காமினி பெர்னாண்டோ கூறினார்.

எனவே இனங்களுக்கு இடையில் மோதலை ஏற்படுத்தும் வகையில் தெரிவித்த கருத்துக்களுக்கு கண்டனம் வெளியிட்ட அருட்தந்தை சிரில் காமினி பெர்னாண்டோ, எந்தவோர் அரசியல் தலையீடும் இல்லாமல் நியாயமான முறையில் விசாரணைகளை நடத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியப் பங்களிப்பு எங்கே?

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளின் நலனுக்காக 31 கோடி எழுபது லட்சம் ரூபா (இந்தியப் பணத்தில்) பெறுமதிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ள திட்டங்களுக்கு இங்குள்ள அரசியல் தலைவர்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., ஆளும் கட்சி தேசியப்பட்டியல் எம்.பியான சுரேன் இராகவன் போன்றோர் இந்த விடயத்தை வரவேற்றுள்ளனர். இப்படி வரவேற்கும் தமிழ் அரசியல்வாதிகளின் பட்டியல் இனி நீளக் கூடும்.

இது நல்ல விடயம்தான். வரவேற்கப்பட வேண்டியதுதான்.

ஆனாலும், இந்த விவகாரத்தை ஒட்டி சில விடயங்களை சுட்டிக் காட்டுவது நமது கடமையாகின்றது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு இந்தியாவின் காத்திரமான பங்களிப்புடன் தீர்வு காணப்படவேண்டும் என்பதை இப்பத்தியில் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றோம்.

இலங்கை விவகாரத்தைக் கையாளும் விடயத்தில் இந்தப் பிராந்தியத்தில் தனது உண்மையான நண்பன் யார், கபடத்தனமான எதிரி யார் என்பதை தெளிவாக அடையாளம் கண்டு, அதனடிப்படையில் செயற்படுவதில் இந்தியா தவறிழைத்து வருகின்றது என்பதையும் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி வருகின்றோம்.

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் விடயத்திலும் இந்தியத அரசும் – அதனுடன் கூட்டுச் சேர்ந்து – தமிழக மாநில அரசும் சில காத்திரமான முடிவுகளை எடுத்துச் செயற்பட வேண்டிய காலம் எப்போதோ கடந்து விட்டது என்ற மனவருத்தம் தரும் உண்மையைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்த அகதிகள் 1990 ஆரம்பத்தில் உயிர் பிழைப்பதற்காகப் படகுகளில் ஏறித் தப்பியோடித் தமிழகம் வந்து சேர்ந்தவர்கள். இப்போது மூன்று தசாப்த காலம் கடந்து விட்டது. அவர்களின் மூன்றாவது தலைமுறை அங்கு பிறந்து வளரும் நிலைமை – அகதிகள் அல்லது ஏதிலிகள் என்ற பெயருடன்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் மீது பௌத்த, சிங்களப் பேரினவாதம் தனது கொடூரக் கரங்களைக் கட்டவிழ்த்து விடத் தொடங்கிய காலத்தில் – 1990களின் முற்பகுதியில் – பக்கத்தில் இருந்த பாரத தேசத்தில் மட்டுமல்லாமல் உலகப் பந்தின் பல தேசங்களிலும் ஈழத் தமிழர்கள் அகதிகளாகக் குடிபுகுந்தனர்.

இந்தியாவில் – தமிழகத்தில் – தஞ்சம் புகுந்த அகதிகளைப் போல நான்கைந்து மடங்கினர் உலகின் பிற தேசங்களுக்கும் வேரோடும் வேரடி மண்ணோடும் தூக்கி வீசப்பட்டார்கள். அவர்கள் யாரும் இன்று ஏதிலிகளோ, அகதிகளோ அல்லர்.

ஐந்து, பத்து ஆண்டுகளுக்கு மேல் தத்தமது நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த எவரையும் அந்தந்த நாடுகள் அகதிகள் அந்தஸ்தில் வைத்திருக்கவேயில்லை. அவை தத்தமது நாடுகளின் பிரஜைகளாக அவர்களைச் சுவீகரித்து அரவணைத்துக் கொண்டன.

இந்தியா மட்டும்தான் ஈழ அகதிகளுக்கு அந்த அந்தஸ்தை வழங்காது அவர்களைத் தமது நாட்டில் ஏதிலிகளாக – நிரந்தர அகதிகளாக – பேணுகின்றது. அந்த அடிப்படையிலான உதவித் திட்டம்தான் இப்போது தமிழக முதல்வர் ஸ்டாலினால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளுக்கு – அவர்களது மூன்றாவது தலைமுறையும் கூட அந்த மண்ணில் விளைந்த போதும், அந்த நாட்டின் பிரஜாவுரிமையை வழங்குவதில்லை என்ற கொள்கையில் புதுடில்லி ஆட்சிப்பீடம் – கொள்கை வகுக்கும் தரப்பு – உறுதியாக இருக்கின்றது.

அதுதான் நிலைமை என்றால் அங்கு அவர்களுக்கு வழங்கப்படும் வசதி வாய்ப்புகள் தற்காலிக ஏற்பாடாகவே இருக்க வேண்டும்.

அந்த அகதிகள் தாயகம் திரும்பக் கூடிய சூழ்நிலைகளை இங்கு ஏற்படுத்த வேண்டிய கடப்பாட்டை இந்தியா விரைந்து செய்ய வேண்டும் – இனியும் காலம் தாழ்த்தாமல்.

அதற்கு முன்னுரிமை கொடுத்து பாரதம் செயற்படவில்லை என்பதுதான் ஈழத் தமிழர்களின் வேதனைக்குரிய கணிப்பாகும்.

## இராணுவம் கட்டுமானப் பணியை நிறுத்தாவிடில் பிரதேச சபையால் அதனை இடித்தகற்ற முடியும்

### கரைச்சி பிரதேசசபைத் தவிசாளர் காட்டம்



இரணைமடு சந்தி பகுதியிலுள்ள வீதியில், இராணுவத்தினரால் அமைக்கப்படும் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்படாவிடின், பிரதேச சபைகள் சட்டத்தின் ஊடாக அதனை இடிக்க முடியும் என கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அருணாசலம் வேழமாலிகிதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் அமைந்திருக்கக்கூடிய இரணைமடு சந்தியை மையமாக வைத்து, இராணுவத்தினரால் பாரிய வளைவு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த வளைவை இடைநிறுத்தி, உரிய அனுமதியின் பிரகாரம் அதனை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பிற்குப் பல தடவை தெரிவித்துள்ளோம்.

ஆனால், இதுவரை காலமும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதமையால், இந்த விடயம் தொடர்பாக சபையில் தீர்மானம் ஒன்றை எடுத்து, சபையினுடைய 52 ஆவது பிரிவு அறிவுறுத்தலுக்கு அமைவாக அவற்றை இல்லாது செய்து விடுவதற்கு அல்லது நீதிமன்றத்தை நாடுவதற்குத் தீர்மானம் எடுத்துள்ளோம்.

கிளிநொச்சி நகரத்தில் அமைக்கப்படுகின்ற வளைவுகள் மற்றும் சின்னங்கள் நகர ஆக்கத்துக்கு உதவக்கூடிய வகையிலே பொருத்தமானவகையில் அமைப்பதற்கான அனுமதிகள் துறைசார்ந்த திணைக்களங்களுடன் இணைந்ததாக வழங்கப்பட வேண்டும் என எங்களிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில் இரணைமடு சந்தியில் இராணுவத்தினரால் அனுமதி எதுவுமின்றி வளைவு கட்டப்படுகின்றமை தொடர்பில் பொது மக்களால் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆகவே, இந்த விடயம் தொடர்பில், நாங்கள் சட்டரீதியாக நடவடிக்கைகளை எடுத்து, கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு நாங்கள் அந்தக் கட்டடத்திலே ஒட்டியுள்ளோம்.

இவ்வாறு எழுத்து மூலமாக நகர்த்தல்களை செய்து கொண்டிருந்த வேளையில், பயணத்தடை அறிவிக்கப்பட்ட காரணத்தால் பிரதேச சபையில் ஏற்பட்ட எதிர்பாராத கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக அலுவலகப் பணிகளை நாங்கள் இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த இடைநிறுத்தப்பட்ட காலத்தைப் பயன்படுத்தி இராணுவத்தினர், குறித்த பணிகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொது மக்களால் மீண்டும் எமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இந்தப் பணிகளை உடனே நிறுத்தி உரிய நடைமுறைகளை பின்பற்றி இராணுவத்தினர் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். - என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## சகல பிரஜைகளுக்கும் நவம்பருக்குள் தடுப்பூசி

### சுகாதார அமைச்சர் தகவல்

எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் 18 வயதிற்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் முழுமையாக தடுப்பூசி செலுத்தும் பணிகள் நிறைவு செய்யப்படும் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கியூப தூதுவரை கடந்த வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடிய போது, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி வழங்கும் பணிகள் நிறைவு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் சகல பிரஜைகளுக்கும் முழுமையான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டதை அடுத்து 3ஆம் தடுப்பூசி வழங்குவது தொடர்பாக அவதானம் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை எதிர்காலத்தில் வீடுகளுக்கு சென்று அன்டிஜன் பரிசோதனை செய்வதற்கான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்களப்பில் ஒரு வாரத்தில் 36 பேர் கொரோனாவால் சாவு!

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மயூரன் தெரிவிப்பு

மட்டக்களப்பில் ஒரு வாரத்தில் 36 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் எனப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் நா.மயூரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

மாவட்டத்தில் நாளாந்தம் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றமையுடன் உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன.

இந்நிலையில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் துரிதமாக இடம்பெற்று வருகின்றது. முதலாவது தடுப்பூசி 92.41 வீதமானவை ஏற்றப்பட்டுள்ளதுடன் அதில் ஆகக் குறைந்தளவு தடுப்பூசி 78.84 வீதம் களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பதிவாகியுள்ளது.



இதற்கிடையில் கடந்த புதன்கிழமை, இரண்டாவது தடுப்பூசி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இன்று(வியாழன்)வரை 27.33 வீதமான தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை இராணுவத்தினரும் வீடு வீடாகச் சென்று தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றனர்.

ஆகவே மக்கள், தற்போதைய சூழ்நிலையை உணர்ந்து, அநாவசியமாக வீடுகளை விட்டு வெளியேறுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

## அங்கம் -58

**ந.வித்தியாதரன்**



தலைவர் பிரபாவுடன் யோகி



1985இல் எனது தமிழகப் பயணத்தின் போதும் திருச்சி போய் இறங்கி, அங்கிருந்து உடனே மதுரை சென்றதாக நினைவு. மதுரை விடயங்களை முடித்துக் கொண்டு மீண்டும் திருச்சி வழியாக சென்னை சென்றேன். எங்கே தங்கினேன் என்பது பற்றிய சரியான நினைவு எனக்கில்லை. ஆனால் நான்கு. ஐந்து நாள்களுக்கு மேல் ஒரே பிஸி. பெரும்பாலும் தமிழ் இயக்கங்களின் வெவ்வேறு அலுவலகங்களில்தான் நேரம் போனது.

புலிகளின் அலுவலகம் சென்றதும் யோகி உட்பட சில போராளிகளை சந்தித்ததும் நினைவில் உண்டு. யாழ்ப்பாணத்தில் கிட்டு தலைமையிலான அணியினர் செயற்படுகின்றனர் என்றும், அவர்களுக்கு புதிதாக வரவிருக்கும் எங்கள் பத்திரிகையுடன் ஒத்துழைக்கும் படியான அறிவுறுத்தல் தமிழகத்திலிருந்து தலைமையிடம் இருந்து செல்லும் என்றும் யோகி மூலம் எனக்கு தெரியப்படுத்தப்பட்டது. அந்தச் சமயத்தில் புலிகள் இயக்கத்தில் பலரை எனக்கு அறிமுகப்படுத்தினார் யோகி. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எனக்கு இரண்டு ஆண்டுகள் சிரேஷ்ட நிலையில் கல்வி பயின்றவர் அவர். பாடசாலைக் காலத்தில் எனக்கு அவர் உதைபந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் (கோச்). இயக்கத்தில் அவருக்கு சிரேஷ்ட நிலையில் இருந்த அவரின் தம்பியார் பொன்னம்மானும் நானும் பாடசாலைக் காலத்தில் ஒன்றாகப் படித்து, ஒரே சைக்கிளில் 'சுழற்றி'த் திரிந்தவர்கள். பொன்னம்மான் தலைமை வகித்த கிரிக்கெட் அணிக்கு நான் விக்கெட் கீப்பர். தமையனார் யோகி அதன் கோச். அது மாத்திரமல்ல, எங்கள் இரண்டு குடும்பங்களும் நெருங்கிய நட்பு உடையவை. நாம் அயலவர்களும் கூட.

எனினும் அந்தத் தமிழக விசிட்டின் போது பொன்னம்மானை நான் சந்திக்க முடியவில்லை. அவர் சென்னைக்கு வெளியே (கோவை என்று கூறினார்கள் என நினைவு) பயிற்சி முகாம் கவனிப்பில் இருக்கின்றார் என எனக்குக் கூறப்பட்டதாக ஞாபகம்.

அந்தத் தடவை ஓரிரு நாள்கள் பல மணி நேரம் யோகியுடன் பேசினேன். தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்து யோகி உடன் பலத்த சத்தமாக அவர்களது முகாமிலேயே விவாதித்த நினைவும் உண்டு. அச்சமயம் புலிகளின் பல பிரதிநிதிகளை யோகி எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர்களில் அன்ரன் பாலசிங்கமும் ஒருவர். ஆனால் அந்தச் சந்திப்பு எனக்கு நினைவில் இல்லை. அச்சமயம் அந்தச் சந்திப்பு என் மனதில் பெரிய விடயமாகப் பதியவே இல்லை.

எனினும் பின்பொரு சமயம் - பல ஆண்டுகள் கழித்து - பாலா அண்ணன் அதனை நினைவூட்டிய போதும் அது எனக்கு நினைவுக்கு வரவில்லை. அப்படியா என்று கேட்கவே முடிந்தது. என் நினைவாற்றல் அவ்வளவுதான் போலும்.

"உன்னை அப்போதே அடையாளம் கண்டு கொண்டோம். யோகி எல்லாவற்றையும் சொன்னான். உன் நண்பர்கள் கூட்டமே புலிகள் இயக்கத்தில் இணைந்து விட்டதால் உன்னையும் எங்கள் ஆளாகப் பார்க்கும் எண்ணம் வந்து இருந்தது. உன் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் வர முன்னரே உன்னை வைத்து அதை அரவணைக்கும் முடிவு எட்டப்பட்டு விட்டது. உன்னுடன் யோகி பேசிக்கொண்டிருந்த அறைக்குப் பக்கத்தில் நாங்கள் (அவர்கள் யார் யார் என்பதை அவர் கூறவில்லை) விடயங்களை செவிமடுத்துக் கொண்டிருந்தோம். உன்னை சாதகமாக நோக்கலாம் என்ற உறுதிப்பாடு ஏற்பட்டது. நீ யாழ்ப்பாணம் திரும்ப முன்னரே உன்னைப் பற்றிய தகவல்கள் களத்தில் இருந்த கிட்டு, திலீபன், கேடில்ஸ் போன்றோருக்கு அனுப்பப்பட்டு விட்டது" - என்ற தகவலை பின்னாளில் பல வருடங்கள் கழித்து ஒருநாள் அன்ரன் பாலசிங்கம் அவர்களே கூறினார். நான் திகைத்துப் போனேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியையும் அதன் தலைவர் அமிர்தலிங்கத்தையும் போற்றி நான் தனிப்பட்ட நட்புரிமையுடன் யோகி அண்ணனுடன் நடத்திய விவாதம் விடுதலைப் புலிகளின் தலைமையால் அப்போதே விரிவாக ஆராயப்பட்டு இருந்தது என்ற தகவல் எனக்கு பின்னாளில் அதிர்ச்சியையும் வியப்பையும் தந்தது.

சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் நான் வெளியிட்ட 'என் எழுத்தாயுதம்' நூலிலும் இது பற்றிய விடயத்தை நான் பின்வருமாறு நினைவில் மீட்டிருந்தேன்:-

"பின்னாளில் - 1985 இல் உதயன் தொடங்கும் காலகட்டத்தில் நான் அவரை(யோகியை) தமிழகத்தில், சென்னை, அடையாறு, இந்திரா நகரில் உள்ள புலிகளின் அலுவலகத்தில் சந்தித்து விரிவாகப் பேசினேன். அப்போது இலங்கைத் தமிழரின் மிதவாத தலைமையாகத் திகழ்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான கடும் போக்கை புலிகள் வெளிப்படுத்தத் தொடங்கியிருந்த காலம். அதை நான் கடுமையாக ஆட்சேபித்தேன். அமிர்தலிங்கம் போன்றோரின் நடவடிக்கைகளைத் தவறான கண்ணோட்டத்துடன் நோக்க வேண்டாம் என்று நான் வற்புறுத்தினேன். எங்கள் வாதம் கடும் வாக்குவாதமாக மாறியது. எனக்கு மிக நெருக்கமானவர் என்ற உரிமையோடுதான் நான் அப்படிக் குரலை உயர்த்தி அவருடன் கடுமையாகப் பேசினேன். ஆனால் பேசிய இடம் புலிகளின் அலுவலகம் என்பதை நான் மறந்து போய் விட்டேன். ஆனால் அந்தச் சம்பவம் எனக்கு ஆரம்பத்தில் புலிகளின் மத்தியில் 'அமிர்தலிங்கத்தின் ஆள்' என்ற அடையாளத்தைத் தந்துவிட்டது.



தலைவர் பிரபாவுடன் பொன்னம்மான்

"அதற்கு முன்னர் தினபதியில் பணியாற்றிய காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றிய செய்திகளைச் சேகரிப்பதற்காக நான் தலைவர் அமிர்தலிங்கத்துடன் நெருங்கிப் பழக வேண்டி இருந்தது.

"1985 இல் நான் தமிழகம் சென்றிருந்த சமயம், இத்தொடர்பை பயன்படுத்தி அங்கு வைத்து அவரைச் சந்தித்தும் இருந்தேன். இது புலிகளின் வட்டாரங்களுக்கும் தெரிந்தே இருந்தது. அதனால் அமிர்தலிங்கத்தின் ஆள் நான் என்பதை குறிக்கும் வகையில் 'அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்' என்பதைச் சுருக்கி 'அப்பாப்பிள்ளை' என்று என்னைக் கிண்டலாக அழைக்கும் வழக்கம் யோகியிடம் இருந்தது."

- இப்படி என் நூலில் நான் குறிப்பிட்டிருந்தேன்.

கடைசிக் காலம் வரை மிதவாதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் சார்புப் போக்கு என் மனதில் இருந்தது என்னவோ உண்மைதான்.

யுத்தம் முடியும் வரையான கடைசி 15 ஆண்டுகள் இலங்கை இனப்பிரச்சினை, யுத்த விடயங்கள் மற்றும் சமாதான முயற்சிகளில் நான் காத்திரமான பங்காற்றினேன். என் பேச்சுக்கும், எழுத்துக்கும், கருத்துக்கும், பங்களிப்புக்கும் இந்த இனப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் இடையே அதிக மரியாதை இருந்தது. வெளிநாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்கள் இவ்விடயங்களை ஒட்டி கலந்துரையாடும் நபராக நான் இருந்தேன். கொடூர யுத்தத்துக்கு மத்தியிலும், சமாதான சூழ்நிலையிலும், முரண்பட்ட தரப்புக்களை நேரில் சந்தித்து, சமாதானமாக, நட்புறவுடன் உரையாடி ஊடாடும் தனித்துவ உரிமை எனக்கிருந்தது. தலைவர் பிரபாகரன், அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், மதியுரைஞர் பாலசிங்கம் போன்றோரிடம் கூட என் எழுத்தும், கருத்தும், நிலைப்பாடும் காத்திரமான அளவுக்கு எடுபட்டன என்று நான் சுய பெருமையாகக் கூறுவேன். இந்த விடயங்களை மிக நெருக்கமாக அவதானித்து வந்த பலருக்கும் - அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, இப்போது ஜனாதிபதியாக இருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ வரை - அது தெரிந்தே இருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் எனக்கு ஏதேனும் நேரடிப் பங்களிப்போ பின்னூட்டலோ இருக்கவில்லை. அது முழுக்க, முழுக்க அப்போதிருந்த கிழக்கிலங்கை தமிழ் ஊடகவியலாளர்களின் துணிச்சலான - பெருமைமிகு - முயற்சியின் பெறுபேறு.

ஆனால் கூட்டமைப்பு உருவாக்கத்தின் பின்னர் கூட்டமைப்பின் சில சில்லெடுப்புகள், சிக்கல்களைத் தீர்த்து வைப்பதில் 'தோன்றாத்துணையாக' காத்திரமான பணியாற்றியிருக்கிறேன். அவை பகிரங்கப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் அல்ல.

ஆனால், சிவநாயகம் ஐயா அனுபவித்து, பட்டறிந்து, எமக்கு அவ்வப்போது உரைத்த ஒரே பாடத்தை நானும் கூட பிறகு இதே தலைவர்களிடம் படித்து நொந்து கொள்ள வேண்டியதாயிற்று. சக்கடத்தார் சறுக்கி விழுந்த பள்ளத்தில் நானும் சறுக்கி விழுந்த கதையாயிற்று சிவநாயகம் ஐயாவுக்கு நேர்ந்த அனுபவம் எனக்கும் கிட்டியபோது.

அப்போது அவர்கள் தமிழரசு மற்றும் கூட்டணித் தலைவர்கள். இவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்லர், நன்றி, நேர்மை, உண்மையுடன் நடப்பவர்கள் அல்லர், பதவிச் சுயநலம் மிக்கவர் என்றார் சிவநாயகம் ஐயா - தன் அனுபவங்களின் ஊடாக.

என்காலத்தில் அவர்கள் தமிழரசு மற்றும் கூட்டமைப்பு தலைவர்கள். சிவநாயகம் ஐயாவின் அதே பாடத்தை நானும் படித்தேன். 2010 இல்.

1995 தொடக்கம் 2009 இல் யுத்தம் முடியும் வரையிலும், அதன்பின்னர் 2010 ஆரம்பம் வரையிலும் என் எழுத்தையும், என் பங்களிப்பையும் மதித்து, என்னை முன்னிறுத்தியே சில பல காரியங்களை ஆற்றிய சில தலைவர்கள் 2010 தேர்தலில் சிவநாயகம் ஐயா முன்னாளில் சொல்லிய அதே பண்பியல்பை தங்கள் சுயநல அரசியலுக்காக வெளிப்படுத்தினர்.

விளைவாக, அதுவரையில் நானும் சேர்ந்து ஒவ்வொரு கல்லாகக் கட்டியெழுப்பிய ஒரு பத்திரிகை சாம்ராஜ்யத்தில் இருந்து 25 ஆண்டுகளின் பின்னர் - 24 மணி நேரத் தீர்மானத்தில் - நானாக வெளியேறும் நிலை எனக்கு ஏற்பட்டது. (10ஆம் பக்கம்...)

காலைக்கதிர் Kalaikkathir

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | கணிதம் | அலகு 15

### சமன்பாடுகளும் சூத்திரங்களும்

(01) சமன்பாடுகளை அமைத்தல்

உ+ம் 01. ஓர் எண்ணின் இரு மடங்குடன் 13ஐக் கூட்டும்போது 85 பெறப்பட்டது.

ஓர் எண்ணை X எனக் கொண்டால்
அதன் இரு மடங்கு = 2X
கூட்டப்பட்ட எண் = 13
பெறப்படும் எண் = 2x + 13
பெறப்பட்ட எண் 85 என்பதால் சமன்பாடானது
2X + 13 = 85 என அமையும்.

i) x எனும் எண்ணிலிருந்து 14ஐக் கழித்தபோது 80 பெறப்பட்டது.
ii) ஓர் எண்ணின் 5 மடங்கிலிருந்து 3ஐக் கழித்தபோது 98 பெறப்பட்டது.
iii) ஓர் எண்ணின் மூன்று மடங்குடன் 2ஐக் கூட்டியபோது 73 பெறப்பட்டது.

(02) சமன்பாட்டைத் தீர்த்தல்

01. $x + 6 = 7$
$x = 7 - 6$
$= 1$

02. $2x + 5 = 9$
$2x = 9 - 5$
$2x = 4$
$x = \frac{4}{2}$
$= 2$

03. $x + 4 = 20$

04. $x - 3 = 27$

05. $7x - 5 = 51$


06. $11x + 1 = 12$

07. $6x = 30$

(03) சூத்திரம் அமைத்தல்

உ + ம் - சதுரமொன்றின் ஒரு பக்க நீளம் L அலகுகள் சுற்றளவு P அலகுகள் ஆகும். P, L என்பவற்றுக்கிடையிலான சூத்திரம் ஒன்றை அமைக்குக.


$L + L + L + L = P$
$4L = P$



1) சமபக்க முக்கோணி ஒன்றின் ஒரு பக்க நீளம் a, சமபக்க முக்கோணியின் சுற்றளவு k எனின் a, k என்பவற்றிற்கு இடையிலான தொடர்பைக் காட்ட சூத்திரம் ஒன்றை அமைக்க

2) L நீளம் b அகலமும் உடைய செவ்வகத்தின் பரப்பளவு Y எனின் Y, L, b என்பவற்றிற்கு இடையிலான தொடர்பைக் காட்ட சூத்திரம் ஒன்றை அமைக்க.

3)




தரப்பட்ட முக்கோணியின் சுற்றளவு P எனின் P இற்கான சூத்திரம் ஒன்றை அமைக்க.

ஆக்கம் : திரு. பா.லாவண்யா
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி கம்சானந்தி முகுந்தன்
விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

## பெருந்தொகையான வெடிபொருள்களை வைத்திருந்த இருவர் மாத்தறையில் கைது

மாத்தறை பகுதியில், பொலிஸ் விசேட அதிரடிப் படையினால் முன்னெடுக்கப்பட்ட இருவேறு விசேட சுற்றிவளைப்புக்களில் சுமார் 2 ஆயிரம் கிலோவுக்கும் அதிகமான அமோனியம் நைற்றைட் எனும் வெடி பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் தென் மாகாண விசேட நடவடிக்கை பிரிவுக்குக் கிடைக்கப் பெற்ற விசேட தகவலுக்கு அமைய, விசேட அதிரடிப்படையின் கட் டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் உத்தரவில் இந்த சுற்றிவளைப்புக்கள் மாத்தறை மற்றும் கந்தரைப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன.

மாத்தறை - மெத்தவத்த பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது, அனுமதிப்பத்திரமின்றி அமோனியம் நைற்றைட் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 1,050 கிலோ அமோனியம் நைட்ரஜனும் 672 ஜெலடின் குச்சிகளும் 10 மீற்றர் நீளமான வெடிக்க வைக்க பயன்படும் நூல் 50 சுருள்களும் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படை அறிவித்துள்ளது. இதன் போது மெத்தவத்த பகுதியைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, 1,000 கிலோ அமோனியம் நைற்றைட்டுடன் மாத்தறை - கெக்குனதுர பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த இரு சுற்றிவளைப்பு சம்பவங்கள் தொடர்பில் மாத்தறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | கணிதம் | அலகு 15

### சமன்பாடுகளும் சூத்திரங்களும்

(01)

a - $9cm^2$
b - $15cm^2$
c - $15cm^2$
d - $21cm^2$
e - $14cm^2$

(02)

b - x - $6cm \times 10cm = 60cm^2$
c - $12cm \times 12cm = 144cm^2$
d - $4.5cm \times 2cm = 9cm^2$
e - $10m \times 10m = 100m^2$
f - $50m \times 2m = 100m^2$

(03) செவ்வகத்தின் பரப்பளவு $= 20cm \times 10cm$
$= 200cm^2$

சதுரத்தின் பரப்பளவு $= 4cm \times 4cm$
$= 16cm^2$

நிழற்றிய பகுதியின் பரப்பு = செவ்வகப் பரப்பு - சதுரப்பரப்பு
$= 200cm^2 - 16cm^2$
$= 184cm^2$

(04) 1. $105cm^2$
2. $19cm^2$

ஆக்கம் : திரு. பா.லாவண்யா
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி கம்சானந்தி முகுந்தன்
விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

## கல்வி பரீட்சைகளுக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

*2021 க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது*

*அதன்படி பரீட்சைக்கு தோற்றுவோர்கள் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை விண்ணப்பம் செய்ய முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.*

## கடத்தப்பட்ட 6 பசு மாடுகளுடன் இருவர் மட்டக்களப்பில் கைது



மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவில் வாகனமொன்றில் ஆறு பசு மாடுகள் திருடப்பட்டு ஏற்றிச் சென்ற வாகனத்துடன் இருவரை வவுணதீவு பொலிஸார் கடந்த புதன்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கமைய, வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுணதீவு பிரதேசத்திலுள்ள பன்சேனை பகுதியில் மேய்ச்சல் தரையில் நின்ற பிரதேச மக்களின் ஆறு வளர்ப்பு மாடுகளை பிடித்து திருட்டுத்தனமாக சிறிய கன்டர் வாகனமொன்றில், ஏற்றி சுவாசிக்க போதிய இடைவெளி இல்லாமல் முற்றாக மூடிய நிலையில் பசுக்களை வதைக்குள்ளாக்கி கொண்டு சென்ற போது வவுணதீவு பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினரால், மேற்படி வாகனத்தையும் அதிலிருந்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

ஊரடங்கு காலத்தை சாதகமாகப் பயன்படுத்தி மக்கள் நடமாட்டம் இல்லாத வேளையில், ஆறு மாடுகள் களவாடப்பட்டு, அனுமதிப் பத்திரம் இல்லாது காத்தான்குடிக்கு கொண்டு சென்ற போதே இம்மாடுகளும் வாகனமும் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், பிரதேசத்தில் தமது மாடுகள் காணாமல் போயிருந்தால் எவராவது வவுணதீவு பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உத்தியோகத்தருக்கு கொரோனாத் தொற்று காணிக்கிளை செயற்பாடுகள் இடைநிறுத்தம்

வவுனியா பிரதேச செயலகத்தின் காணிக்கிளையின் செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமையிலிருந்து எதிர்வரும் 10 ஆம் திகதிவரை அதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த கிளையில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் மேற்படி சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** ஒரு நல்ல குடும்பப் பெண்ணை எதைவைத்து இனங்காணலாம்?

**பதில் :-** அவளது கணவன் நல்லவனாய் வாழ்வதை வைத்து இனங்காணலாம். ஒரு நல்ல குடும்பப் பெண்ணால் நிச்சயம் தன் கணவனை நல்லவழியில்



செலுத்தமுடியும்.

இதுதானே ஆண்களின் வழக்கம். எல்லாப் பழியையும் பெண்கள் மேல் போட்டுவிட்டு அவர்கள் தப்பிக்கப் பார்க்கிறார்கள் என்கிறீர்களா? மற்றவிடயங்களில் எப்படியோ எனக்குத் தெரியாது. மேலே நான் சொன்னதுமட்டும் சத்தியமான உண்மை. ஒருபெண், தேவைகளையும் ஆசைகளையும் கட்டுப்படுத்திக் கொண்டு அறவழி நடப்பது என்று முடிவுசெய்துவிட்டால், நிச்சயம் அவள் கணவன் அவளைப் பின்தொடர்ந்துதான் ஆகவேண்டும். இது அனுபவபூர்வமான உண்மை. விதிவிலக்காக ஒரு சிலர் இருக்கலாமே தவிர, பெரும்பான்மைபற்றி இதுவே சாஸ்வதமாம்.

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் பெண்ணால்தான் அறம் நிலைக்கும் எனும் இச்செய்தியைத் தனது ‘மங்கையராய் வந்து பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா! அவர் பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ இந்தப் பாரில் அறங்கள் வளருதம்மா!’ கவிதையில் பதிவுசெய்கிறார்.

கம்பனும் இச்செய்தியை ஆமோதிக்கிறான். இராமனுக்கு முடிசூட்டலாமா என ஆன்றோர் சபையைக் கூட்டித் தசரதன் வினவுகிறான். அதற்குப் பதில் அளிக்க எழுந்த வசிட்ட மாமுனிவர், ‘சீதை நல்லவள். ஆகவே இராமனுக்கு முடிசூட்டலாம்’ என்று கூறுவதாய்க் காட்சி அமைத்திருக்கிறார்.

ஒரு குடும்பத்தைப் பொறுத்தவரை ஆண்தான் அதைத் தாங்கும் அச்சு. பெண்தான் அதனை நகர்த்தும் சக்கரம். பாரத்தைத் தாங்கும் அச்சையும் சேர்த்து நகர்த்துவது சக்கரம்தான். அதனால்த்தான் கணவனுடைய நன்மையை வைத்துப் பெண்ணினுடைய பெருமையை உணரலாம் என்றேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘பெண்ணின் பெருந்தக்கயாவுள?’ வள்ளுவரும் சொல்லியிருக்காருங்கோ. – எப்பூபூடீ…!**

**2. கேள்வி:-** கூட்டுக்கட்சிகள், அரசாங்கத்தைக் கைவிடத் தொடங்கியிருப்பது போலத் தெரிகிறதே, கவனித்தீர்களா?

**பதில் :-** கவனிப்பதென்ன கவனிப்பது? ஆட்சியாளர்கள் அதனை வாய்விட்டே சொல்லத் தொடங்கிவிட்டார்களே! வேற்று நாடுகள் உட்புகுந்துவிளையாடத் தொடங்கிவிட்டதாய் வேறு புலம்பியிருக்கிறார்கள். நீர் நிறைந்திருக்கும் மட்டும் குளத்தில் மகிழ்வோடு இருக்கும் பறவைகள் அது வற்றியதும் அதனை விட்டுப் பறந்துபோய் விடும் என்கிறாள் ஔவை. ‘அற்றகுளத்தில் அறுநீர்ப்பறவைபோல்’ என்பது ஔவையின் கவிதைஅடி. எங்களது அரசகுளமும் (குலமல்ல) பலவிதத்தாலும் வற்றத் தொடங்கிவிட்டது. சீனர்களும் எவ்வளவுக்கென்றுதான் கை கொடுக்க முன்வருவார்கள். இலங்கை வல்லரசுகளின் போட்டிக் களமாய் மாறியிருக்கும் இன்றைய நிலையில் தளரும் இடத்திலெல்லாம் கழுகு கொத்தத்தான் பார்க்கும். ஆனால் ஒன்று, இதனால் ஆட்சியாளர்களுக்கு ஓர் நன்மையும் கிடைத்திருக்கிறது. அது என்ன நன்மை என்கிறீர்களா? ‘கேட்டினும் உண்டு ஓர் உறுதி கிளைஞரை



நீட்டி அளப்பதோர் கோல்’என்று வள்ளுவர் சொன்னதுபோல இந்தக் கேடு ஆட்சியாளர்களுக்கு உண்மை நண்பர்களை இனங்காட்டியிருப்பதைத்தான் சொல்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘புல்லரெலாம் ஒன்றுபட்டால் சூது நடக்கும்’ – கண்ணதாசன் வாழ்க!**

**3. கேள்வி: –** மங்கள சமரவீரவின் மரணம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** இன பேதமற்றுச் சிந்தித்தும் பேரினமக்களின் ஆதரவைப் பெற்றிருந்த ஓர் அதிசயத்தலைவர் அவர். நல்லவர்களைக் காலம் கவர்ந்துவிடுவதில் இருந்து, இந்தத் தேசத்திற்கு இன்னும்



நல்லகாலம் பிறக்கவில்லை என்று தெரிகிறது. முன்பு ஒருமுறை ஓர் குசும்புக்கார நண்பன் என்னிடம், நல்லவர்கள் எல்லாம் விரைவாக இறந்துவிடுகிறார்கள், ஆனால் கெட்டவர்கள் பலகாலம் வாழ்கிறார்கள் அது ஏன் தெரியுமா என்றுகேட்டான். நான் பேசாமலிருக்க பிறகு அவனே, நரகம் எப்போதும் ஹவுஸ்புல்லாய் இருப்பதால் யமனால் கெட்டவர்களுக்கு உடன் ரிக்கெற் கொடுக்க முடிவதில்லையாம். சொர்க்கத்தில் இருக்கைகள் எல்லாம் உட்கார ஆள்கள் இன்றி வெறுமனே இருப்பதால் நல்லவர்களுக்கு உடனே ரிக்கெற் கிடைத்துவிடுகிறதாம். அதனாற்றான் அப்படி என்றான். அன்றைக்கு அவனின் பதிலைக் கேட்டு முறைத்தேன். இன்றைக்கு அவன் சொன்னதிலும் நியாயம் இருக்குமோ? என்று எண்ணத் தோன்றுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ அப்ப கெட்டவனாய் மாறினாபோச்சு! ஹி…ஹி…. ஹி….**

**4. கேள்வி: –** உலகம் முழுவதும் எதிர்த்து நிற்கும் தலிபான்களை இலங்கை அரசுஆதரிப்பதாய்ச் சொல்கிறதே?

**பதில் : –** சொல்லாமல் அவர்கள் வேறு



என்னதான் செய்வது? உலகத்தையே எதிர்த்து, சீனா தலிபான்களை ஆதரிக்கிறது. பட்டம் பறக்க அதற்கு வால் கட்டுவார்கள். அந்த வால் பட்டம் பறக்கும் இடமெல்லாம் தானும் பறக்கவேண்டியதுதான். சீனப் பட்டத்திற்கு இலங்கையை வாலாக்கிவிட்டார்கள் (பாழாக்கிவிட்டார்கள் எனினுமாம்). எனவே இலங்கை அப்படித்தான் இனிச் சொல்லமுடியும். ‘நக்கினார் நாவிழந்தார்’ என்று நம் மூதாதையர்கள் சும்மாவா? சொன்னார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘நீ போகும் இடமெலாம் நானும் வருவேன் போ! போ! போ!’**

**சினிமாபாட்டுக்காரனும் சரியாத்தான் எழுதியிருக்கிறான். ஹி….ஹி… ஹி….**

**5. கேள்வி: –** மகாராஜா நிறுவனஅதிபர் ராஜமகேந்திரன், பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர போன்ற வசதிமிக்க பிரமுகர்களை எல்லாம் கூட கொரோனா விழுங்கிவிட்டதே? இதில் இருந்து என்ன தெரிகிறது?

**பதில் :-** பணத்தாலும் வசதிகளாலும் மரணத்தை வெல்ல முடியாது என்பதைத்தான் மேல் மரணங்கள் உணர்த்துகின்றன. கணினியில் குறித்த புறோக்கிராமை (programme) புகுத்திவிட்டால் அந்தப் புறோக்கிராம் முடிந்ததும் கணினி தானாக நின்றுவிடும். அதுபோல ஒவ்வொரு உயிருக்குள்ளும் ஒருபுறோக்கிராம் அமைக்கப்பட்டிருக்கிறது போல. அது முடிந்ததும் அந்தந்த உயிர்கள் அணைந்து போகின்றன. அந்தப் புறோக்கிராமர் (programmer) யார் என்கிறீர்களா? நாங்கள் கடவுள் என்கிறோம். வேறுசிலர் அதை ஏற்கிறார்கள் இல்லை. எது எப்படியோ பணத்தாலோ படிப்பாலோ பதவியாலோ மாற்றமுடியாத இயற்கையின் அந்த இரகசிய ஒழுங்கால்தான் மனிதன் கொஞ்சமாவது கடவுளுக்குப் பயந்து நடக்கிறான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘ஆடும் வரை ஆடுவார் மூடு திரைபோடுவான் மேடை அவன் மேடை அல்லவோ’ – சூப்ப்ப்பர்ர்ர்…!**


**6. கேள்வி: –** ஊரடங்கு வாழ்வு எப்படி இருக்கிறது?

**பதில் :-** போர்க் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்களுக்கு ஊரடங்கு வாழ்வு ஒன்றும் புதிதல்ல. ஆனால் அந்த ஊரடங்குவாழ்வு இந்தளவு அச்சம் தரவில்லை. அப்போதைய ஊரடங்கு வாழ்வில் தீமை செய்யக்கூடிய எதிரி யார்என்று தெரிந்திருந்தது. அவன் எங்கிருந்து வருவான் என்று தெரிந்திருந்தது. அவனிடமிருந்து தப்ப எங்கு ஒழியவேண்டும் என்றும் தெரிந்திருந்தது. நம்மைக் காத்துக்கொள்ள வேறுநாடுகளுக்குத் தப்பிச் செல்லும் வழியும் இருந்தது. இப்போதைய ஊரடங்கில் எதிரி கண்ணுக்குத் தெரிவதில்லை. அவன் எங்கிருந்து வருவான் என்று தெரிவதில்லை. அவனிடமிருந்து தப்ப எங்கு ஒழிவதென்றும் தெரிவதில்லை. வேறுநாடுகளுக்குத் தப்பிச் செல்லவும் வழியில்லை. முன்னையது நாம் ரசித்த ஊரடங்கு. இப்போதையது நம்மை நடுங்கவைக்கும் ஊரடங்கு.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ கண்ணுக்குத் தெரியாத நடுங்க வைக்கும் எதிரி**

**7. கேள்வி:-** கொரோனாவால் மனித இனமே அழிந்துபோய் விடுமோ ?

**பதில் :-** கொரோனா மனித இனத்தைச் சூழ்ந்திருக்கும் பேரிருள் என்பதில் எந்த



ஐயமும் இல்லை. ஆனால் ஒரே ஒரு நிம்மதி, இருள் என ஒன்று வந்தால் அடுத்து ஒளி வரும் என்பது இயற்கை நியதி. அதை வைத்துச் சொல்லுகிறேன் அஞ்சாதீர்கள். மனித இனம் இந்த இருளையும் கடந்துவாழும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வது அஃது ஒப்பதில்’**



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 113

**322. இந்தியாவை ஒட்டி ஏன் அவ்வளவு வினைகிறீர்கள்? இவற்றில் தமிழ் மக்களின், அவர்களின் தலைவர்களின் வினைப்பங்கு எவ்வளவு?**

இந்தியாவிற்கு விடுதலைப் புலிகளின் போக்கில், அது தன்னுடைய பிராந்திய வளர்ச்சிக்கு எதிராக செயல்படலாம் என்றும் அல்லது அதனால் தமிழ் நாட்டில் பிரிவினை ஊக்குவிக்கப்படலாம், பயங்கரவாதம் வளர்க்கப்படலாம் என்ற கரிசனைகள் இருந்திருக்கலாம். றோவிற்கு இந்தியாவின் சர்வதேச புலனாய்வுப் பகுதி என்ற முறையில் அதனைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய கடமை உண்டு. ஆனால், அதற்காகத் தமிழ் மக்கள் இவ்வளவு மனிதாபிமானமற்ற முறையில் அழிக்கப்படுகிறார்கள் என்பது, அவர்களது புலனாய்வில் அகப்படாத செய்திகள் அல்ல. அவற்றை எல்லாம் மறைத்து, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, மனித உரிமை காப்பு சங்கங்கள், ஐ.நாவின் களநிலை மட்டப் பிரதிநிதிகள், வண. பிதா ஜேம்ஸ் பத்திநாதன் போன்றவர்கள் தந்த தகவல்களை எல்லாம் புறந்தள்ளி, அரசாங்கத்துக்காக கலாநிதி ராஜீவ் விஜயசிங்க போன்றோர் வடித்த கணக்குகளில் தான் ஒரு வல்லரசாக சர்வதேசத்துக்கு நியாயப்படுத்தி, பட்டினிச் சாவுகள் தொடருவதற்கு காரணமாக இருந்தமைதான் மோசமான விடயம்.

இந்தியா ஒரு வல்லரசாக வலம் வருவதில் ஈழத் தமிழ் மக்களுக்கு எந்தக் காழ்புணர்வும் இருக்காது. அதற்காக, அவர்கள்(இந்தியா) மனிதாபிமானமற்ற செய்கைகளினாலும், மனித உரிமைகளை மதிக்காத



வர்களாகவும் வளர்ந்து வல்லரசு ஆகுவதில், அவர்கள் அதற்கு வேத இதிகாச காலம் தொட்டு காந்தி கற்பித்த வாழ்வியல் நெறிகளை எல்லாம் தூக்கி எறிவதில், எந்த மனிதத்துவத்தை சர்வதேசத்துக்கு கொடுக்கப் போகிறார்கள்?

பிரணாமுகர்ஜி, இந்தியாவின் எல்லாக் கட்சிகளாலும் மதிக்கப்பட்டவர். போர்க்காலங்களில் வெளிநாட்டு அமைச்சராக இருந்து, பின்னர் ஜனாதிபதியானவர். வங்க தேசத்திலிருந்து மத்திய அரசுக்கு வந்தவர். இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவர். கிழக்கு பாகிஸ்தானிலிருந்து அகதிகள் வங்காளத்துக்கு வந்தபோது அவர்களுடன் வந்து சேர்ந்த விடுதலைப் போராளிகளான முக்திவாஹினியை அரவணைத்தவர். ஆகவே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நன்கறிந்தவர். அந்தப் பின்னணியில் அவர் அப்படியான பேச்சுக்களால் திசை திருப்பியதால் வெந்த மக்களின் அவலக்குரல் வன்னியிலிருந்து அவர்களின் மனச்சாட்சியை சுடும். அவ்வளவே. அப்படி அவர் வெளியிட்ட தகவல்களும் இராணுவத்தின் திட்டங்களும் பொய்யானவை என்பது யுத்தம் முடிந்த அடுத்த சில நாள்களிலே தெரிந்தது. அவற்றை றோ அறிந்து ஸ்ரீலங்காவுக்கு தகவல் கொடுத்து கொண்டிருந்த செய்மதிப் படங்களினால் சனத்தொகையை கணக்கெடுத்திருக்க முடியாதென்பது அபத்தம்.

பாலித கோஹண, போர் நாள்களில் வெளிவிவகார அமைச்சின் செயலாளராக இருந்து ஐ.நாவின் நிரந்தர பிரதிநிதியாக பதவி பெற்று சென்று 11 நவம்பர் 2009இல் ஆஸ்திரேலிய ஏ.பி.ஸி. தொலைக்காட்சியில் ரோனி ஜோன்ஸ் என்ற பிரபல ஊடகவியலாளருக்குப் செவ்வி அளித்தார். அந்தப் போட்டியின் சாரம் வருமாறு:-

கேள்வி: ஸ்ரீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பின், ஆயிரக்கணக்கான மக்கள் முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், அவற்றின் நிலைமைகள் பரிதாபமானவையாவும் அங்கு கற்பழிப்பு இடம்பெறுவதாகவும், மக்கள் காணாமலாக்கப்படுவதாகவும் தமிழ் மக்களிடமிருந்து தகவல்கள் வருகின்றன. இவை பற்றி என்ன சொல்கிறீர்கள்?



பதில்: - விடுதலைப் புலிகளின் பிரச்சார இயந்திரங்களிலிருந்து வேறெதனை எதிர்பார்க்க முடியும்? இப்படிப்பட்ட கதைகளைத்தான் அவர்கள் அன்றிலிருந்து அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலாவது அந்த முகாம்கள் புதைத்தலுக்கான இடைச்செருகல் முகாம்களல்ல. நாங்கள் அவற்றை 2,94,000 பேருடன் தொடங்கிறோம். நேற்றுவரை அங்கு 1,38,000 பேர் இருக்கிறார்கள். மற்றவர்கள் தங்கள் கிராமங்களுக்கு போய்விட்டார்கள். தொடர்ந்து போவார்கள். ஜனவரி வரையில் எல்லோரும் போய்விடுவார்கள் என எண்ணுகிறோம். கற்பழிப்பு என்பவை எல்லாம் கட்டுக் கதைகள். அந்த முகாம்களின் அமைப்பின் பிரகாரம் அப்படி ஒன்று நடந்தால், அயலிலுள்ளவர்களுக்கு நடப்பது தெரியும். அப்படியான ஒன்றை நாங்கள் கேள்விப்படவில்லை.

கேள்வி: அப்படியானால் சர்வதேச பிரதிநிதிகள் அவற்றைப் பார்க்கவோ பராமரிக்கவோ விடப்படவில்லை. அது ஒரு கரிசனையாக இருக்கிறது. அது ஏன்?

பதில்:- நீங்கள் விடுதலைப் புலிகளின் பிரச்சாரத்தை வெகு சுலபமாக விழுங்குகிறீர்கள்.

அங்கு 54 அரசு சார்பற்ற நிறுவனங்கள் பணிபுரிகின்றன. அவர்கள் கடந்த ஆறு மாதங்களாக வேலை செய்கிறார்கள். ஐ.நா.ஸ்தாபனங்கள் பணிபுரிகின்றன.



கேள்வி: உண்மையில் தமிழ் மக்கள் மட்டுமல்லா், இப்படியான சர்வதேச நிறுவனங்களின் பணியாளர்கள்தான் முகாம்களின் நிலையை பற்றி கூறுகிறார்கள். அவை பற்றி செய்திகள் தெரிவித்ததற்காக இன்னுமொரு ஆஸ்திரேலிய பிரஜை ஜேம்ஸ் எல்டர் என்பவர் நாடுகடத்தப்பட்டார். ஏன்? இவர் யுனிசெப் அதிகாரி.

பதில்:- அவர் முகாம்களின் நிலை பற்றி சொல்லவில்லை. இப்படியாக முகாம்களுக்கு மக்கள் வருமுன்னே சொன்னார். உங்களுடைய தகவல்களைச் சரியாக தெரிந்து கொள்ளவேண்டும்.

கேள்வி: அவர் (ஜேம்ஸ் எல்டர்) சொன்னது குழந்தைகள் பட்டினியில் சாகிறார்கள் என்பது. அதை நீங்கள் ஆமோதிப்பது உங்களது பதில்களில் வருகிறது. அவர் ஏன் நாடு கடத்தப்பட்டார்?

பதில்: - என்னுடைய அபிப்பிராயத்தில் அப்படியான தகவல்கள் தருவது ஒரு ஐ.நா. அதிகாரியின் கடமை அல்ல. அவை ஒரு பயங்கரவாத அமைப்பின் பிரச்சாரத்துக்கு ஆதரவு தரவல்லது. தனது கடமையை மீறி அவர் செயல்பட்டார்.

கேள்வி: ஜேம்ஸ் எல்டர் குரல் கொடுக்க முடியாத குழந்தைகளுக்காக, தங்களுக்காகப் பேச முடியாத, பாதிக்கப்பட்ட மக்களின் அங்கலாய்ப்பை வெளிப்படுத்தினார் என்றுதானே யுனிசெவ் சொல்கிறது?

பதில்:- அவர்களுக்காகப் பேசுவது யுனிசெவ்வின் தொழிலல்ல. அவர்கள் வேலை குழந்தைகளையும் பெண்களையும் பாதுகாப்பதுதான். அவர்களுக்காகப் பேச யுனிசெவ்வுக்கு அதிகாரமில்லை. அது ஒரு நிவாரண அமைப்பே. அது அரசாங்கத்தை சங்கடத்தில் தள்ள முடியாது.

கேள்வி: ஐ.நாவின் காரியதரிசி கூட ஜேம்ஸ் எல்டரை நாடு கடத்தியதைக் கண்டித்துள்ளாரே? இது ஓர் இராஜதந்திரப் பின்னடைவு என்பதை உணர்கிறீர்களா?

பதில்:- யுனிசெவ் இதை மறந்துவிட்டு ஸ்ரீலங்காவோடு தொடர்ந்து வேலை செய்ய விரும்புகிறது. அந்த நிறுவனம் எங்களுக்கு உதவியாக இருந்தது. அவர்கள் அந்தப் பணிகளைத் தொடர்வார்கள் என்று நம்புகிறோம்.

- இதுதான் அந்தச் செவ்வி.

இவற்றிலிருந்து போர் வலயத்தின் உண்மை நிலையைக் கிரகிக்கலாம். அவற்றை ஸ்ரீலங்கா தனது தேவைகளுக்காக அளாப்பலாம். ஆனால் இவற்றைத் தெரிந்து கொண்டு மக்களைப் பரிதவிக்கவிட்டு இந்தியா ஸ்ரீலங்காவிற்கு ஆதரவு கொடுப்பது என்பது தமிழ் மக்களுக்குச் செய்த பாரதூரமானதும் மனிதாபிமானத்திற்கும் எதிரான குற்றம். அவரது பதிலில், தாங்கள் முகாம்களைத் தொடங்கும்போது 2,94,000 பேர் இருந்தார்கள் என்கிறார்கள்.



யுத்த பூமியில் 70,000 பேர்தான் இருக்கிறார்கள் அத்தனை பேருக்கும் உணவு,மருந்து அனுப்புகிறோம் என எல்லோருக்கும் இந்தியாவும் சேர்ந்து சுமார் ஆறு மாதங்களுக்கு மேல் காதில் பூ வைத்து, மக்களை பட்டினியிலும், மருந்தின்றியும் சாக விட்டு விட்டு போர் வலயங்களில் இருந்து 2,94,000 பேர் அவர்களது முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள் என்றால் இவர்கள் எங்கிருந்து வந்தார்கள்?

(வளரும்.......)

# வேகமான வாழ்க்கைக்கு விவேகமாக பாதை அமைக்கும்

## கிருபா லேணர்ஸ் சாரதி பயிற்சிப் பாடசாலை நிறுவுனர்



# அழகசுந்தரம் கிருபாகரன்

ஆக்கம் - ப்ரியமதா பயஸ்

இந்தவாரம் இவர்

ஒரு காலத்தில் இருசக்கர மிதிவண்டிகளும் மாட்டு வண்டில்களும் ஓடிய தெருக்களில் இப்போது அந்த இரண்டும் இல்லை. ஆனால் - வேகமான, நெரிசலான, விதம் விதமான, நவீன வாகனங்கள் ஓடும் தெருக்களாக மட்டும் இப்போது அவை இருக்கின்றன - காலத்துக்கு காலம் மாறும் நவீன உலகில் இயந்திர மயமான இந்த நெருக்கடி மிக்க உலகில் ஒரு எரிபொருள் பயன்படுத்தும் வாகனம் இல்லை என்றால் வாழ்க்கைக்கு பின்னால் கூட நம்மால் ஓடமுடியாது. அவ்வளவுக்கு வேகமாக ஓடும் இந்த மனித வாழ்வில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாகனம் கட்டாயம் என்கின்ற சூழலில் நாம் இப்போது இருக்கிறோம் .



அந்தச் சூழலை இலகுவாக்க, நாம் நம் வாகனங்களை நிதானமாக, சரியான முறையில் வீதிகளில் செலுத்த கற்றுக்கொள்ள வந்தவைதான் எமக்கான இந்த சாரதி பயிற்சிப் பாடசாலைகள்.

அந்த வகைக்குள் வந்திருக்கும் கிருபா லேணர்ஸ் என்ற இந்த பெரும் பாடசாலை ஒரு இருப்பத்தைந்து வயது இளைஞனால் உருவாக்கப்பட்ட பாடசாலை என்பது பெருமைக்குரிய விடயமே.

1980 ஆம் ஆண்டில் பிறந்த அழகசுந்தரம் கிருபாகரன் பாடசாலைக்கல்வியை கொழும்பில் முடித்துக்கொண்டு சிறிய சிறிய வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இருந்த நேரம், அவரின் எண்ணத்தில் தோன்றியதுதான் இந்த பாடசாலை - தனக்கு 25 வயதாக இருக்கும்போதே இந்த பாடசாலையை உருவாக்கி அவர் அதிபராகினார் .

தற்போது 15 க்கும் மேற்பட்ட கிளைகளும், நூற்றுக் கணக்கான பணியாளர்களுடனும், லட்சக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய ஒரு பெரும் நிறுவுநராக நம்முன் தோன்றியிருக்கிறார் .

எந்த விடயங்களுக்கும் வயது முக்கியம் இல்லை என கூறும் கிருபா அவர்கள், தான் 25 வயதில் சாதித்ததை பெரிதுபடுத்தாமல் பேசுகிறார் அதுவே அவரின் சாதனைக்கு முதல்படி என்பதை உணர முடிந்தது.

2002 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் கிருபா லேணர்ஸ் என்ற பெயரில் முதன்மைக் காரியாலயம் தொடங்கப்படுகிறது - வித்தியாசமான முறையில் ஒரு தொழிலை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற ஆர்வமே தன்னை இந்த துறைக்குள் கொண்டுவந்தது எனக்கூறும் கிருபா - இப்போது தரமான பயிற்சி நவீன வசதிகளுடன் கூடிய சாரதி பயிற்சி விளக்கங்கள், நிதானமான நீண்டநேர பயிற்சி, பயிற்றப்பட்ட சாரத்திய வல்லுநர்கள் மூலம் ஈருருளி முதல் கனரக வாகனங்கள்வரை நேர்த்தியாக பயிற்றப்படும் நுட்பம், என்பனவற்றால் வடக்கில் முதன்மை சாரதி பயிற்சிப் பாடசாலையாக உருவெடுத்துள்ளது .

சாரத்தியம் என்பது பலருக்கு முடியாத காரியம் - ஆனால் அதை எல்லோருக்கும் உரியதாக்க முடியும் என்ற முனைப்போடு வழங்கும் வல்லமையும் முயற்சியும் அதிகம் கொண்ட இடம் கிருபா லேணர்ஸ் என்பது பலராலும் புகழப்படும் ஒரு விடயம் தான்.

சரியான முறையில் வாகனங்களை ஒடுவதற்கு பயிற்றுவித்தல் இந்த நாட்டில் தான் முயன்றிருக்கும் இந்த விடயத்தின் மூலநிலை எனக் குறிப்பிடும் கிருபா - ஆரம்பக்கல்வியோடு வீதி விதிகள் உட்பட்ட சாரத்தியம் தொடர்பான கல்வி இணைக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறார் - நாம் வாழும் வாழ்க்கையில் நினைக்க முடிக்க உயிரை இழப்பது வாகன விபத்துக்களில்தான் எனவே அந்த நிலைமையை நாம் மாற்றவேண்டும் எனில் பாடசாலைக்கல்வியோடு சாரத்தியம் தொடர்பான கல்வியையும் இணைப்பதே சிறந்த வழி என்று ஆலோசனை வழங்குகிறார் கிருபா அவர்கள் .

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நா பழக்கம் என்பதுபோல - இளம் வயதில் விதைக்கப்படும் நல்ல விடயங்கள் எப்போதும் சரியான பாதையை காட்டும் என உறுதியாக நம்புகின்றார் அவர் - இனி வரும் காலத்தில் யாரும் எரிபொருள் பயன்படுத்தும் நவீன வாகனங்களை வீதிகளில் ஓடாமல் இருக்க முடியாது எனவே இளமையில் கற்கும் கட்டாய ஆரம்பக் கல்வியோடு வீதி விபத்துக்கள் பற்றியும், வீதி ஒழுங்குகள் பற்றியும் நடைமுறைகள் பற்றியும் கற்றுக்கொடுப்பதே சிறந்த வழியும் நல்ல முயற்சியுமென்பதை வலியுறுத்துகிறார் கிருபா.

தான் இந்த சேவையோடு கூடிய தொழிலதிபராக இருந்துகொண்டு சமூக சேவைக்குள் தன்னை முழுமையாக அர்ப்பணித்து கொண்டுள்ளமை இவரின் இன்னொரு முகமாக உள்ளது. தன்னால் முடிந்தவரை வறுமைக்கும் கல்விக்கும் உதவுவதை தன்னுடைய தலையாய கடமையாக அவர் ஏற்றுள்ளமை மிகப்பெரும் விடயமாகும் - தன்னால் முடிந்தவரை சரீர உதவியாய் செய்துகொண்டிருந்த நான் இப்போது பொருளுதவி, பணஉதவி என செய்கின்றேன் என கூறும்போது மிகுந்த கனிவை வெளிப்படுத்துகிறார்.

இந்த சமூகச் சேவைக்கு ஒரு பலமான பாதையாக அமையும் என்பதனால் 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் நிலையை தேர்ந்தெடுத்தார் - ஆனாலும் அந்த இலக்கு நிறைவேறவில்லை என்பதனால் அவர் தன்கடமைகளை கைவிடவில்லை தொடர்ந்தும் தன்னால் முடிந்த உதவிகளை பரவலாக செய்தவண்ணம் உள்ளார் என்பது பெருமைக்குரியது .

நூறுக்கும் மேற்பட்டவர்களுக்கு தொழில் வழங்கும் இவர் - சிறந்த சமூக சேவைக்காக நூற்றுக் கணக்கான விருதுகளை வாங்கி குவித்துள்ளார் - 2017 ஆம் ஆண்டு கல்விக்கான சேவைக்காக ஜனாதிபதி விருதை பெற்றுள்ளார் என்பது பெரும் பெருமைக்குரியது - சிறந்த தொழில் முயற்சியாளருக்கான விருதை வருடாந்தம் பெற்றுக்கொள்வதோடு - பணியாளர்களுக்கான சலுகைகள், சேமலாபநிதி, அரசவரி இவற்றை சரியான முறையில் செலுத்தும் நிறுவனத் தலைவர் என்ற சிறப்பு விருதுகளையும் இவரே தட்டிச்செல்வது வாழ்த்துவதற்கும் போற்றுவதற்கும் உரியதே.



ஒரு தொழிலதிபராக மட்டும் நின்றுவிடாமல் இந்த சமூகத்தின் மீது அக்கறை கொண்ட ஒரு கொடையாளனாகவும் தன்னை மேம்படுத்தியுள்ள கிருபா லேணர்ஸ் உரிமையாளர் - சிறந்த தொழிலதிபரும் நல்ல கொடையாளனுமே.



# குடாநாட்டில் கொரோனா அசுர வேகம் நேற்று 414 பேர் இனம் காணப்பட்டனர்

## மேலும் நான்கு பேர் உயிரிழப்பு

DISTRICT DISASTER MANAGEMENT COORDINATING UNIT - JAFFNA
District Operation Cell for "COVID 19"
Situation Report for Outbreak of Covid - 19

Reporting Date: 27.08.2021

Reporting Time:. 16.00 hrs

| DS Division | Number of Person Quarantine at home / Other places (F- Family, M - Members): Previously Quarantine Person (A) F | Previously Quarantine Person (A) M | Newly Quarantine Reporting Date (B) F | Newly Quarantine Reporting Date (B) M | Withdrawal Quarantin Reporting Date (C) F | Withdrawal Quarantin Reporting Date (C) M | Total (A+B-C) F | Total (A+B-C) M | PCR Postive Cases: Number of Confirmed Cases on Previous Date | PCR: Number of Confirmed Cases on reporting date | PCR: Total Number of Confirmed Cases (Cumulative) | RAT Positive Cases: Number of Confirmed Cases on Previous Date | RAT: Number of Confirmed Cases on reporting date | RAT: Total Number of Confirmed Cases (Cumulative) | TOTAL (PCR + RAT) | Total death |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Delft | 21 | 61 | | | | | 21 | 61 | 33 | | 33 | 5 | | 5 | 38 | 0 |
| Velanai | 570 | 1671 | | | | | 570 | 1671 | 259 | 1 | 260 | 80 | 11 | 91 | 351 | 5 |
| kayts | 70 | 205 | 8 | 28 | 27 | 74 | 51 | 159 | 64 | 2 | 66 | 114 | 3 | 117 | 183 | 3 |
| Karainagar | 45 | 135 | | | | | 45 | 135 | 172 | | 172 | 137 | 3 | 140 | 312 | 2 |
| Jaffna | 319 | 856 | 61 | 165 | | | 380 | 1021 | 1405 | 5 | 1410 | 619 | 23 | 642 | 2052 | 49 |
| Nallur | 389 | 1287 | | | | | 389 | 1287 | 690 | 7 | 697 | 273 | 12 | 285 | 982 | 26 |
| Sandilippay | 313 | 1060 | 11 | 38 | 47 | 178 | 277 | 920 | 912 | 7 | 919 | 270 | 17 | 287 | 1206 | 16 |
| Uduvil | 233 | 687 | | | | | 233 | 687 | 836 | 3 | 839 | 225 | | 225 | 1064 | 26 |
| Tellippalai | 225 | 872 | 5 | 20 | 45 | 154 | 185 | 738 | 475 | 3 | 478 | 118 | 12 | 130 | 608 | 10 |
| Chankanai | 470 | 1081 | | | | | 470 | 1081 | 499 | 2 | 501 | 193 | | 193 | 694 | 17 |
| Kopay | 342 | 725 | | | 70 | 142 | 272 | 583 | 588 | 11 | 599 | 147 | 5 | 152 | 751 | 30 |
| Chavakachcheri | 471 | 1464 | | | | | 471 | 1464 | 486 | 4 | 490 | 383 | 120 | 503 | 993 | 15 |
| Karaveddy | 155 | 383 | | | | | 155 | 383 | 496 | 2 | 498 | 169 | 100 | 269 | 767 | 6 |
| Pointpedro | 132 | 241 | | | | | 132 | 241 | 552 | 1 | 553 | 440 | 55 | 495 | 1048 | 19 |
| Maruthankerny | 57 | 145 | | | | | 57 | 145 | 37 | 2 | 39 | 43 | 3 | 46 | 85 | 0 |
| Jaffna Prision | 0 | 0 | | | | | 0 | 0 | 225 | | 225 | 0 | | 0 | 225 | 0 |
| Jaffna Police | 0 | 0 | | | | | 0 | 0 | 99 | | 99 | 0 | | 0 | 99 | 0 |
| Kopay Police | 0 | 0 | | | | | 0 | 0 | 1 | | 1 | 0 | | 0 | 1 | 0 |
| Tellippalai Police | 0 | 0 | | | | | 0 | 0 | 13 | | 13 | 0 | | 0 | 13 | 0 |
| Chavakachcheri | 0 | 0 | | | | | 0 | 0 | 13 | | 13 | 0 | | 0 | 13 | 0 |
| Chunnakam Police | 0 | 0 | | | | | 0 | 0 | 2 | | 2 | 0 | | 0 | 2 | 0 |
| Kodikamam Police | 0 | 0 | | | | | 0 | 0 | 1 | | 1 | 0 | | 0 | 1 | 0 |
| Pointpedro Police | 0 | 0 | | | | | 0 | 0 | 13 | | 13 | 0 | | 0 | 13 | 0 |
| Chankanai Police | 0 | 0 | | | | | 0 | 0 | 1 | | 1 | 0 | | 0 | 1 | 0 |
| Pandaithariuppu | 0 | 0 | | | | | 0 | 0 | 1 | | 1 | 0 | | 0 | 1 | 0 |
| KKS Police | 0 | 0 | | | | | 0 | 0 | 1 | | 1 | 0 | | 0 | 1 | 0 |
| Random at A9 | 0 | 0 | | | | | 0 | 0 | 12 | | 12 | 0 | | 0 | 12 | 0 |
| Medical Students | 0 | 0 | | | | | 0 | 0 | 10 | | 10 | 0 | | 0 | 10 | |
| Total | 3812 | 10873 | 85 | 251 | 189 | 548 | 3708 | 10576 | 7896 | 50 | 7946 | 3216 | 364 | 3580 | 11526 | 224 |

| DS Division | No of Food Packs supplied to Quarantined Families: Rs. 5,000/- Packs | Rs. 10,000/- Packs | Total Packs | Total Expenditure (Rs) | No of Food Packs supplied to Isolated Village Families: Rs. 5,000/- Packs | Rs. 10,000/- Packs | Total Packs | Total Expentitu (Rs) |
|---|---|---|---|---|---|---|---|---|
| Delft | 0 | 85 | 85 | 850,000.00 | 0 | - | - | |
| Velanai | 0 | 523 | 523 | 5,230,000.00 | 0 | 330 | 330 | 3,300,000.0 |
| kayts | 0 | 276 | 276 | 2,760,000.00 | 0 | 379 | 379 | 3,790,000.0 |
| Karainagar | 0 | 293 | 293 | 2,930,000.00 | 0 | 218 | 218 | 2,180,000.0 |
| Jaffna | 0 | 1478 | 1478 | 14,780,000.00 | 0 | 1,871 | 1871 | 18,535,000.0 |
| Nallur | 0 | 1317 | 1317 | 13,170,000.00 | 0 | 433 | 433 | 4,330,000.0 |
| Sandilippay | 0 | 1295 | 1295 | 12,950,000.00 | 0 | 921 | 921 | 8,945,000.0 |
| Uduvil | 0 | 1763 | 1763 | 17,630,000.00 | 0 | 103 | 103 | 1,030,000.0 |
| Tellippalai | 0 | 630 | 630 | 6,300,000.00 | 0 | 257 | 257 | 2,570,000.0 |
| Chankanai | 0 | 1334 | 1334 | 13,340,000.00 | 0 | 0 | 0 | |
| Kopay | 0 | 1613 | 1613 | 16,130,000.00 | 0 | 0 | 0 | |
| Chavakachcheri | 0 | 1368 | 1368 | 13,680,000.00 | 0 | 738 | 738 | 7,380,000.0 |
| Karaveddy | 0 | 1041 | 1041 | 10,410,000.00 | 0 | 299 | 299 | 2,990,000.0 |
| Pointpedro | 0 | 1237 | 1237 | 12,370,000.00 | 0 | 730 | 730 | 7,300,000.0 |
| Maruthankerny | 0 | 377 | 377 | 3,770,000.00 | 0 | 0 | 0 | |
| Jaffna Prision … Medical Students | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| Total | 0 | 14630 | 14630 | 146,300,000.00 | 0 | 6279 | 6279 | 62,350,000.00 |

| Details of Lockdown Area | Families | Members |
|---|---|---|
| Velanai (J/26) | 326 | 1047 |
| Total | 326 | 1047 |

| | PCR | RAT | Total Case |
|---|---|---|---|
| Total Confirmed Cases | 7946 | 3580 | 11526 |
| Total no of Death | | | 224 |

District Assistant Director,
District Disaster Management Coordinating Unit, Jaffna

M.Piratheepan
Agent / Addl. District Secretary
Government Agent/District Secretary/Addl.District Secretary

(ந.லோகதயாளன்)


யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் 414 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளதாக மாவட்ட கொரோனா செயலணியின் அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டின் பல பகுதிகளில் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனைகளின் போது 364 பேர் தொற்றுடன் இனங்காணப்பட்டனர் எனவும் , பி.சி.ஆர். பரிசோதனைகளின்போது 50 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் அதிகபட்சமாக சாவகச்சேரியில் 124 பேரும், கரவெட்டியில் 102 பேரும் அடங்குகின்றனர். அதே வேளை, பருத்தித்துறையில் 56 பேர் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். குடாநாட்டில் 4 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் எனவும் 2021 - 08 -27ஆம் திகதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தரவு குறித்து சில தரப்புகளில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டதால் அந்தத் அறிக்கை இங்கு அப்படியே பிரசுரமாகுகிறது. 26 ஆம் திகதி மாலையில் வந்த அறிக்கையின் பின்னர் நேற்று மாலையில் வந்த அறிக்கை இது.

# அத்தியாவசிய சேவைகளுக்கு ஊரடங்கு காலத்தில் அனுமதி



## இராணுவத் தளபதி தெரிவிப்பு

தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு செப்டெம்பர் 6ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த காலத்தில் அனைத்து ஏற்றுமதித் துறைமற்றும் ஆடை தொழிற்சாலைகள் வழக்கம்போல் செயற்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என இராணு வத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப் பகுதியில் அனைத்து விதமான அத்தியாவசிய சேவைகள், மருந்து தயாரிப்பு மற்றும் விநியோகம், விவசாயம், ஆடைக் கைத் தொழில் ஆகியவற்றை எவ்வித இடை யூறுமின்றி முன்னெடுக்க முடியும் என வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத்தவிர, 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பிரஜைகளுக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கான வேலைத்திட்டம் சுகாதாரத்துறையினரால்தொடர்ந்துமுன்னெடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளார்.

# வவுனியாவின் புதிய அரச அதிபராக பி.ஏ.சரத் சந்திர நேற்று பதவியேற்பு

**(ந.லோகதயாளன்)**

வவுனியா மாவட்ட புதிய அரச அதிபராக பௌத்தசாசன அமைச்சில் உயர் அதிகாரியாகப் பணியாற்றிய பி.ஏ.சரத் சந்திர நேற்று பதவியேற்றார்.

வவுனியா மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய சமன் பந்துலசேன வடக்கு மாகாண பிரதம செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றிருந்தார்.

இதையடுத்து மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றிய தி.திரேஸ்குமார் கடந்த ஒரு மாதகாலமாக பதில் அரச அதிபராகப் பொறுப்புக்களை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், பௌத்தசாசன அமைச்சில் முக்கிய பதவியை வகித்த பி.ஏ. சரத் சந்திரவை வவுனியா மாவட்டத்துக்கான புதிய அரச அதிபராக அமைச்சரவை அனுமதித்த நிலையில் அவர் அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் நேற்று தனது பதவியை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் சுப நேரமான மதியம் 1.30 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மதகுருமார்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலகத்தின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

### உருக்குலைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

குறித்த பகுதி கிளிநொச்சி, பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியா? அல்லது யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியா என்பதில் குழப்பம் நிலவியதால் சடலத்தை மீட்பதில் தாமதம் ஏற்பட்டது எனத் தகவல்கள் மூலம் அறியமுடிந்தது.

### சாவகச்சேரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன் போது அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## மேலும் 20 லட்சம் 'சினோபோர்ம்' இன்று வருகின்றது நாட்டுக்கு

சீனாவிலிருந்து மேலும் 20 லட்சம் சினோ போர்ம் தடுப்பூசிகள் நாளை இலங்கைக்குக் கொண்டுவரப்படவுள்ளன என்று இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தத் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறுமானால், இதுவரை சீனாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடி 80 லட்சமாக அதிகரிக்கும்.

அத்துடன், இம்மாதத்தில் சீனாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை 70 லட்சமாகவும் மாறும் என்றும் சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

## யாழில் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான இரண்டாவது தடுப்பூசி

கொரோனாத் தடுப்பூசிகள் மூன்றாம் கட்டமாக யாழ்ப்பாணம் மாவட் டத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளன.

இவை 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான இரண்டாவது தடுப்பூசிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளின் ஊடாக குறிப்பிட்ட வயதினருக்கான இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

### வவுனியாவில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 222 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், வவுனியா பூங்கா வீதியை சேர்ந்த 83 வயதுடைய ஆண் ஒருவரும், நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த 86 வயது பெண் ஒருவரும் என இருவர் கொரோனாத் தொற்றால் நேற்று மரணமடைந்துள்ளனர்.

மரணித்த இருவரது உடல்களையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### தமிழ் ஊடகத்துறையின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சிவநாயகம் ஐயா சொன்ன மாதிரி கையில் பேனா இல்லை என்றால் உன் நிழலும் கூட உன்னை மதிக்காது என்பதை அப்போது அனுபவப் பாடமாக நான் படித்தேன்.

சென்னையில் என் வித்தியாசமான அனுபவத்தை எழுதப் புறப்பட்ட நான் என் எழுத்தை வேறு திசையில் திருப்பி விட்டமைக்காக மன்னியுங்கள்.

ஆனாலும் கூட, அது, சிவநாயகம் ஐயாவின் வழியில், அதே பாணியில் எனக்கு கிட்டிய அனுபவம் பற்றிய பகிர்வுதான்.

கூட்டணியினரின் - கூட்டமைப்பினரின் - இந்த நன்றியறிதல் இல்லா சுயநலப் பண்பியல்பான - போக்குகள், அனுபவங்கள் குறித்து தன் கசப்பான அனுபவங்களை சிவநாயகம் ஐயா எழுதாமல் போனாலும், நான் பிறிதொரு சமயத்தில், பிறிதொரு தொடரில் நிச்சயம் எழுதுவேன்.

சரி. தொடர்ந்து தமிழக அனுபவத்தையும், அதன் விளைவாக யாழ்ப்பாணத்தில் எங்களுக்கு ஊடகத்து றையில் கிடைத்த - வெளியில் தெரியாத - சாதகமான விளைவுகளையும் நாளை தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்....)

# ஏற்றுமதி மற்றும் சுற்றுலாத்துறையை மீட்டெடுப்பது குறித்து அரசு கவனம்

## இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தகவல்

ஏற்றுமதியை அதிகரிப்பது மற்றும் சுற்றுலாத்துறையை மீட்டெடுப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்துகிறது என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

வெளிநாட்டு இருப்புக்களில் குறைவு காணப்படும் நிலையில், அரசாங்கம் ஏற்றுமதியை அதிகரிக்க விரும்புகிறது என அவர் கூறினார்.

அதன்படி முக்கிய அமைச்சர்களை அழைத்து நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்கும் முறை தொடர்பாக நிதியமைச்சரும் விவாதித்தார் என தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

இதேவேளை 2020 ஆம் ஆண்டில், நாட்டுக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை



15 ஆயிரமாக இருந்தாலும் அந்த எண்ணிக்கை இந்த ஆண்டு மேலும் குறைந்துள்ளது என சுட்டிக்காட்டினார்.

ஆகவே, டிசெம்பர் மாத இறுதிக்குள் பெரும்பான்மையான மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டால், டிசெம்பர் மாதம் முதல் நாட்டின் சுற்றுலாத்துறையை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்றும் தயா சிறி ஜெயசேகர தெரிவித்தார்.

# கொரோனாவின் பிடியிலிருந்து மீண்டார் அஜித் றோஹண

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும் முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண கொரோனாத் தொற்றிலிருந்து குணமாகி மருத்துவமனையிலிருந்து நேற்று வீடு திரும்பினார்.

அவர் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் இருந்து வெளியேறுவதற்கு முன்னதாக மருத்துவமனை பணிக்குழாமினருக்கு நன்றி தெரிவித்து, எடுத்துக்கொண்ட படத்தை இங்கு காணலாம்.



# தொற்றுக்குள்ளான அக்காவை வீட்டை விட்டுத் துரத்திய தம்பி

களுத்துறையில் கொவிட் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வீட்டுக்கு வந்த அக்காவை தம்பி ஒருவர் வீட்டை விட்டு துரத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பல்லேவெல பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் ஒருவரே இவ்வாறு துரத்தப்பட்டுள்ளார். இதனால் அவர் 3 நாள்களாக வீட்டுக்கு பின்புறத்தில் உள்ள பகுதியில் வசித்து வருகின்றார்.

தனது ஒரே சகோதரன் தன்னை இவ்வாறு வீட்டுக்குள் அனுமதிக்காமையால் அயலவர்களின் உதவியுடன் அவர் உயிர் வாழ்கிறார் எனத் தெரிய வந்துள்ளது.

அந்தப் பெண் தனது சகோதரனுடன் ஒரே வீட்டில் வாழ்ந்து வருகின்ற நிலையில் அண்மையில் கொவிட் தொற்றுக்குள்ளாகி மீரிகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

10 நாள்கள் சிகிச்சை பெற்றவர் கடந்த 21ஆம் திகதி மீண்டும் வீட்டுக்கு வந்துள்ளார். இதனால் தனது சகோதரன் கதவைத் திறக்காமையால் வீட்டுக்கு வெளியே வெயில் மற்றும் மழையில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார் என அவர் கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தான் இறுதியாக சிகிச்சை பெற்றபோது அணிந்த ஆடையுடனேயே தற்போதும் உள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஆடைகளை எடுப்பதற்கேனும் அறைக்குள் செல்ல தனது சகோதரன் அனுமதி வழங்குவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது மகள் வேலை செய்யும் இடத்துக்கு செல்வதற்குப் பணம் மற்றும் ஆடைகளை எடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு அவர் தனது சகோதரனிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

சுகாதாரப் பரிசோதகர்கள் அவ்விடத்திற்கு வந்து அவர் மூலம் இனிமேல் கொவிட் தொற்றாதென்பதைத் தெளிவுப்படுத்திய போதிலும் சகோதரன் அதனை நிராகரித்துள்ளார்.

# நல்லதொரு மனிதரை இழந்துவிட்டோம் மங்களவுக்கு விக்னேஸ்வரன் அனுதாபம்



நல்லதொரு மனிதனை இழந்து விட்டோம். இவரின் மறைவால் நாட்டில் தற்போது சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் ஒரு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மனிதர்களை மனிதர்களாகப் பார்க்கும் பண்பு சிங்கள அரசியல்வாதிகளிடம் குறைந்து வருகின்றது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன்.

மங்களவின் மறைவுக்கு அவர் ஊடகங்களுக்கு அனுப்பிய இரங்கலுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

சிறுபான்மையினர் மகிழ்வுடன் வாழ்ந்தால் தான் பெரும்பான்மையினர் நிம்மதியுடனும் மகிழ்வுடனும் வாழலாம் என்ற கருத்தை வலியுறுத்தியவர் அவர். அவரின் தந்தையின் சகோதரி பிரபாகரனின் உறவினரான ஆழிமைந்தன் ஆனந்தனை மணம் முடித்ததாலோ என்னவோ அவருக்கு தமிழ் மக்கள் மீது ஒரு அன்பும் கரிசனையும் இருந்தது. அவருடன் கருத்துக்கள் பகிர்ந்து கொண்ட போது அதனை உணர்ந்து கொண்டேன்.

மனிதாபிமானம் மிக்க, ஜனநாயக மனப்பாங்கு கொண்ட புரிந்துணர்வு மிக்க ஓர் அரசியல்வாதியை நாடு இழந்துவிட்டது.

அவரின் ஆத்மா சாந்தி அடைவதாக! அவரின் உற்றார் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். - என்றுள்ளது.




வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விவரம் :**

முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00
இரண்டாம் இடம் - ரூபா 5,000.00
மூன்றாம் இடம் - ரூபா 3,000.00
தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. செந்திலப்பதி எனப் போற்றப்படும் முருகப் பெருமானின் முதற்கோவிலாகப் போற்றப்படும் குமராலயம் எது?**

..................................................................

**2. சைவ வினா விடையை எழுதியவர் யார்?**

..................................................................

**3. யாழ்ப்பாண வைபவ மாலையின் பதிப்பாசிரியர் யார்?**

..................................................................

**4. நல்லைக் கந்தனின் குபேர வாயில் கும்பாபிசேகம் எந்த ஆண்டு இடம்பெற்றது?**

..................................................................

**5. அபிராமி அந்தாதியைப் பாடியவர் யார்?**

..................................................................

சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்

16

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ------------------------------------------------
2. பிறந்த திகதி : ------------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ------------------------------------------
4. பாடசாலை : ---------------------------------------------------
5. முகவரி : -----------------------------------------------------

.............................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர்களின் மூளைகள் பழுதடைந்து விட்டனவா?

## சரத்பொன்சேகா கேள்வி

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது இந்த மாத சம்பளத்தை கொரோனா நிதியத்துக்கு ஒப்படைக்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்–

அரசாங்கம் கூறும் கொரோனா நிதியத்துக்கு எமது பணத்தை ஒப்படைத்தால் அந்த நிதியத்துக்கு என்ன நடக்கிறது என தெரியாமல் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நெருக்கடிநிலையின் மத்தியில், அமைச்சர் ஒருவர் பருப்பு சாப்பிட முடியாவிட்டால் பயறு சாப்பிடு மாறு கூறுகின்றார். ஆனால், பருப்பை விட பயறு விலை அதிகம். எனவே, இவ்வாறான அமைச்சர்கள் மக்களின் வாழ்க்கையை நகைச்சுவையாகப் பார்க்கின்றனர். எவ்வித அர்த்தமும் இல்லாமல் நக்கல், கேளிக்கைகளுடன் பதிலளிக்கின்றனர்.

இவர்கள் மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை. இதே அமைச்சர் தான் மக்கள் வீடுகளிலிருந்து வெளியே செல்வதைத் தடுப்பதற்காக தான் எரிபொருள் விலை அதிகரிப்பு எனக் கூறினார்.

மருந்து விலை அதிகரிப்புக்கும் பொருத்தமற்ற காரணங்களை சில அமைச்சர்கள் கூறுகின்றனர். எனவே, இந்த அமைச்சர்களின் மூளைகள் பழுதடைந்து விட்டனவா எனத் தெரியவில்லை. இன்று நாட்டில் இருப்புகளும் இல்லை அதே போல், நாட்டிலுள்ள வைத்தியசாலைகளின் இரத்த வங்கிகளில் இரத்தம் இருப்பில் இல்லை. இவ்வாறு நாடு பின்னோக்கிச் செல்லும் போது, அரசாங்கம் தூங்கிக் கொண்டா இருக்கிறது என எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.



# கொவிட் தொற்றாளர் உயிரைக் காக்கும் அபூர்வ மருந்தை இழந்தது இலங்கை

## அரசியல் அழுத்தங்கள் காரணமாம்

உலக நாடுகளில் கொவிட் நோயாளர்களின் உயிரைக் காப்பாற்ற அனுமதி வழங்கப்பட்ட ரெகன் கோவ் என்ற மருந்தை இலங்கைக்கு கொண்டு வர முடியாமல் போயுள்ளது. இதன் பின்னணியில் அரசியல் அழுத்தம் இருப்பதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ரெகன் கொவ் என்ற மருந்து தீவிர ஆபத்தான நோயாளிகளுக்கு உட்பட வழங்கும் போது நூற்றுக்கு 31 வீதம் வெற்றிகரமான தன்மையை வெளிப்படுத்தியுள்ளது.

அவதானமிக்க நோயாளிகளின் உயர் அவதானம் அதன் மூலம் 81 வீதம் குறைவடைந்துள்ளதாக பரிசோதனையில் உறுதியாகியுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், இந்தியா உட்பட பல நாடுகளுக்கு தற்போது ரெகன் கொவ் மருந்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி றொனால்ட் ட்ரம்ப் கொவிட் தொற்றுக்குள்ளாகியிருந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு வழங்கப்பட்டதன் ஊடாகவே ரெகன் கொவ் எனப்படும் மருத்து தொடர்பில் உலகில் முதல் முறையாக பேசப்பட்டது. கொவிட் தொற்றால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த ட்ரம்ப் அந்த மருந்து மூலம் குணமடைந்தார். அவராலேயே அந்த மருத்து தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் அந்த மருந்து பரிசோதனை மட்டத்திலேயே காணப்பட்டுள்ளது. பின்னர் அந்த மருந்திற்கு பல நாடுகளின் அனுமதி கிடைத்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த மருந்தை இலங்கைக்கு கொண்டு வருவதற்காக தனியார் நிறுவனம் இலங்கை சுகாதார அதிகாரிகளிடம் விடுத்த கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் அரசியல் அழுத்தத்துக்கமைய அந்த அனுமதி திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# மேலும் 626 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 626 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுப் பரவுவதைத் தடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 59 ஆயிரத்து 621 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு அமுலில் உள்ள நிலையில், மேல் மாகாணத்துக்கு நுழையும் மற்றும் அங்கிருந்து வெளியேறும் 13 இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நேற்று முன்தினம் மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறும் பகுதியில், 307 வாகனங்களில் பயணித்த 515 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேலும், மேல் மாகாணத்துக்குப் பிரவேசித்த 302 வாகனங்களில் பயணித்த 580 பேர் சோதனைச்சாவடிகளில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# புத்தாக்க அரங்க இயக்க வாராந்த இணையவழி அரங்கக் கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் கதையாடல் 8 நிகழ்வு நாளை (ஞாயிற்றுக்கிழமை) இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி. குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடகங்களில் உளவியல் சிகிச்சை முறைகள் என்னும் விடயத்தில் உளமகிழ்வூட்டும் இல்லப் பணிப்பாளர் தொழில் வழிகாட்டலும் உள ஆற்றுப்படுத்தலும் ஆசிரியர் சு. இக்னேசியஸ் கிளனி கதையாடவுள்ளார். ஏற்புரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி. அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 7155965 8226 கடவுச் சொல் சூம் ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# அகில இலங்கை, ஆஸ்திரேலிய கம்பன் கழகங்கள் இணைந்து நடத்தும் 'முந்துதமிழ்' நிகழ்வு இன்று!

அகில இலங்கைக் கம்பன் கழகமும் ஆஸ்திரேலியக் கம்பன் கழகமும் இணைந்து நடத்தும் 'முந்துதமிழ்' எனும் மாதாந்த இயலரங்கின் ஓகஸ்ட் மாத நிகழ்வு இன்று (சனிக்கிழமை) மாலை 3.30 மணிக்கு (இலங்கை நேரம்) நிகழ்நிலை நிகழ்வாக நடைபெறும். இந்நிகழ்வு, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சிவாச்சாரியார் சிவஸ்ரீ இந்திரன் குருக்களின் மங்கல ஆரத்தியோடும், சென்னையைச் சேர்ந்த செல்வி கண்மணி சேகரின் கடவுள் வாழ்த்தோடும் ஆரம்பிக்க உள்ளது.

இந்த நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக, தமிழ் நாட்டைச் சேர்ந்த நீதியரசர் திருப்புகழ் அருட்செல்வர் முருகபூபதி ஐயா தலைமையில் அருணகிரியின் முருக தமிழ் என்ற பொருளிலான கருத்தரங்காக மலரவுள்ளது.

முருக இலக்கியங்கள் மூன்றை துருவி ஆராய்ந்து பேசி மகிழ்விக்க அறிஞர் பெருமக்கள் காத்திருக்கிறார்கள். திருப்புகழை – கவிஞர் சோ.பத்மநாதனும் கந்தர் அலங்காரத்தை – பேராசிரியர் மாவை பசுபதியும் கந்தர் அநுபூதியை – பொற்கிளிக் கவிஞர் சொ. சொ.மி.சுந்தரமும் விரித்துரைக்க உள்ளனர்.

உலகெங்கிலும் நோயும் அச்சமும் நிறைந்திருக்கும் இன்றைய நிலையில் நம் நல்லையம்பதியில் அருணகிரி நாதர் உற்சவம் நிகழ்கின்ற இந்த நேரத்தில் முருகப் பெருமானை நம் வீட்டில் இருந்தவாறே சிந்தித்துப் பயன்பெற பெரியோர்கள் கூடி துணை செய்ய இருக்கிறார்கள்.

இந்நிகழ்வை அனைவரும் கண்டுகளித்து பயன் கொள்ளுங்கள்.

முருகு தமிழ் மாந்தி பெருகு துயர் களைவோம். ஒவ்வொரு மாதமும் நிறைவு சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு முந்து தமிழ் நிகழ்வு இடம்பெறும்.

AKILA ILANGAI KAMBAN KAZHAGAM
KAMBAN KAZHAGAM AUSTRALIA
எனும் யூடியுப் முகவரிகளிலும்
KAMBAVARITHY ILANKAI JEYARAJ
KAMBAN KAZHAGAM AUSTRALIA
எனும் போஸ்புக் முகவரிகளிலும் பார்த்து மகிழலாம். இணையவழி நேரலையாக– என்றுள்ளது.

# கராப்பிட்டிய வைத்தியசாலை விடுதிகள் கொவிட் விடுதிகளாக மாற்றப்பட்டன

காலி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் கராப்பிட்டிய வைத்தியசாலையின் மேலும் நான்கு விடுதிப் பிரிவுகள் கொரோனா சிகிச்சை விடுதிப் பிரிவுகளாக மாற்றப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக குறித்த வைத்தியசாலையின 35, 36 மற்றும் 68ஆவது விடுதிப் பிரிவுகளுக்கு மேலதிகமாக 11,15,17 மற்றும் 21 ஆகிய விடுதிப் பிரிவுகள் கொரோனா சிகிச்சை விடுதிப் பிரிவுகளாக மாற்றப்பட்டுள்ளன.

தென் மாகாணத்தில் 48 ஆயிரத்து 619 கொரோனாத் தொற்றாளர்கள் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் 24 ஆயிரத்து 830 பேர் காலி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


Personal English Classes
K. GANESH (BA. Pera)
யாழ் நகரில் தனித்தனியாக அவரவரது தராதரத்திற்கு ஏற்றபடி
Grammar Fluent Spoken
Grade 7 -GCE O/L -A/L
பட்டதாரிகள், தொழில் புரிவோர் ஆர்வம் உள்ளோர் இங்கு வந்து விரிவாக விளக்கமாக கற்கமுடியும்

077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.08.2021 இல் வெளியிடப்பெற்றது.